Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (29-5-66) இதழ் 111

பராபவ வைகாசி 16 ஸபர் 8 ஞாயிற்றுக்கிழமை

## ரூ. 25,000 பெறுமதியான கடத்தல் பொருள்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கள்ளக்கடத்தல் பொருள்களென்ற சந்தேகத்தின் மீது இருபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான சால்வைகள், காஞ்சிபுரம் சேலைகள், சாரங்கள் ஆதியன யாழ்ப்பாணம் சுங்கப் பகுதியினரால் நேற்று முன்தினமிரவு உடுப்பிட்டியில் ஒரு வீட்டில் கைப்பற்றப்பட்டன.

இந்தியாவிலிருந்து கள்ளமாக கடத்தப் பட்டதாகக் கருதப்படும் இப் பொருள்களை, சுங்கத் தடுப்பு அதிகாரி திரு. ஸி. ஏ. வீரசிங்கா, மற்றும் திருவாளர்கள் ஹேரத், ஆரோக்கியநாதன், குணரத்தின ஆகியோர் சென்று கைப்பற்றினர்.

இப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. (ந. நி.)

# இலங்கை வானொலி கூட்டுத்தாபனமாகும்

## யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் அஞ்சல் நிலையங்கள்

### வானொலிக் கமிஷன் அறிக்கையில் தெரிவித்துள்ள சிபார்சுகள்

கொழும்பு. சனி

இலங்கை வானொலியை ஒரு கூட்டுத்தாபனமாக திருத்தி அமைக்கவேண்டும் என்று வானொலி கமிஷன் தன் அறிக்கையில் சிபார்சு செய்திருக்கின்றது. கமிஷன் அறிக்கை இன்று வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, காலி, மாத்தறை, பதுளை ஆகிய மாவட்டங்களில் வானொலி அஞ்சல் நிலையங்களை நிறுவி அப்பிரதேச மக்களின் கலைகலாச்சார வளர்ச்சிக்கு ஆக்கம் அளிக்கவேண்டும் என்றும் கமிஷன் தன் அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இலங்கை வானொலியை நியூஸிலாந்தில் இருப்பது போல் ஒரு வானொலி கூட்டுத்தாபனத்தின்கீழ் திருத்தி நிறுவவேண்டும் என்று

(8-ம் பக்கம் பார்க்க)

## 25 ஆயிரம் ஆசிரியர்கள் தினசரி வேலைசெய்வதில்லை!

கொழும்பு, சனி

பாடசாலைகள் நடைபெறும் ஒவ்வொருதினமும் நாடுபூராவிலுமுள்ள எல்லா பாடசாலைகளிலும் சுமார் 25000 ஆசிரியர்கள் வேலைக்கு வராமல் இருந்து விடுகிறார்கள் என்று சமீபத்தில் கல்வி இலாகா நடத்தியுள்ள ஒரு ஆராய்ச்சியின் மூலம் தெரியவந்துள்ளது. இதன்படி வருடாவருடம் வேலைசெய்யாத நாட்களுக்காக ஆசிரியர்களுக்கு அரசாங்கம் சுமார் ஏழரைக் கோடி ரூபாவைச் சம்பளமாகக்கொடுக்கின்றது.

இந்நிலைமையை, ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் 21 நாள் விடுமுறையை 7 நாட்களாகக்குறைப்பதின் மூலம் சமாளிக்கலாம் என்று கல்வி மந்திரி இரியகொல்லை நம்புகின்றார்.

ஆசிரியர்கள் அவ்வப்போது எடுக்கும் விடுமுறை தினங்களைத் தவிர வருடத்தில் மூன்று மாதங்கள் தவணை விடுமுறையையும் அனுபவித்துவருகிறார்கள். அத்துடன் போயா தினங்களுக்கு முந்திய தினத்திலும் பிரதிவாரமும் அவர்களுக்கு விடுமுறை கிடைப்பதோடு அரசாங்கம்விடுமுறை தினங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ள 15 தினங்களிலும் விடுமுறை கிடைக்கின்றது.

## நெல்லியடி பட்டினசபை அடுத்தவாரம் கலைக்கப்படலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொக்குவில், நல்லூர், பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் ஊழல்கள் குறித்து ஸ்தலஸ்தாபன சேவைக்கமிஷனர் திரு பெர்னாண்டோ, உதவி உள்ளூராட்சி ஆணையாளருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

நெல்லியடி பட்டின சபையை அடுத்த வாரத்தில் கலைத்துவிடுவதென இந்த ஆலோசனையின் போது முடிவுசெய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

கொக்குவில் கிராமசபையிடமிருந்து வரவேண்டிய வரிப்பணம் 14 தினங்களில் கட்டப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருந்தும், மாதக்கணக்காகியும் அத்தொகை இன்னும் கட்டப்படவில்லையென்று உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கமிஷனருக்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து கமிஷனரிடம் ஆணையாளர் சிலஆலோசனைகளைச் சொல்லியிருப்பதாகவும் தெரிகின்றது. (ந. நி.)

## இருவர் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

சமீபத்தில் ஆனைக்கோட்டையில் ஒரு வீட்டில் ரூபா 1450 பெறுமதியான ஆபரணங்கள் திருட்டுப்போனது சம்பந்தமாக இரண்டு நபர்கள் கைதாகியுள்ளனர்.

எஸ். செல்லத்துரை, எஸ். நடராசா, ஆகிய அவ்விரு சந்தேக நபர்களையும் ஆனைக் கோட்டைப் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு, கே. கார்த்திகேசு கைதுசெய்து யாழ்ப்பாண நீதவான் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர்செய்தார். நீதவான் சந்தேகநபர்களை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். (ந. நி.)

### ராஜன் கதிர்காமர் பதவி நிரந்தரம்

கொழும்பு, சனி

இலங்கை கடற்படையின் பதில் தளபதியாகவிருக்கும் ராஜன்காதிர்காமரின் பதவி இப்பொழுது நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.

தளபதி ராஜன் கதிர்காமர் 1960-ல் ரொயிஸ் டி' மெல்லிடமிருந்து இப்பதவியைக்கையேற்றார். அதிலிருந்து அவர் பதில் தளபதியாகவே இருந்துவந்துள்ளார். பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு தற்பொழுது அவருடைய பதவியை 1964-ம் ஆண்டுதொடக்கம் நிரந்தரப்பதவி வகிப்பதாக ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

யாழ் மாநகரசபை நிர்வாகம்

## விசாரணையில் பல முக்கிய விஷயங்கள் அம்பலம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிர்வாகம்பற்றி ஸ்தல ஸதாபன சேவைக்கமிஷனர் திரு. டபிள்யு. எஸ. பெர்னாண்டோ நடத்திவரும் விசாரணைகளின்போது மாநகர சபையின் நிர்வாகத்தில் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளதாகக் கருதப்படும் சில முக்கிய தகவல்கள் வெளிவந்திருப்பதாக அறியப்படுகின்றது.

○ வட்டார வேலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பணம், சபையின் அங்கீகாரத்துடன் செலவளிக்கப்படாதது, ○ இவ்விஷயத்தில் மாநகர சபையின் உபவிதிகளுக்கு முரண்பாடாக நடந்துகொள்வது, ஒருவட்டாரத்துக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை வேறு வட்டாரத்துக்கு சபையின் அங்கீகாரம் பெருமல் பயன்படுத்துவது ○ ஒரு துறைக்கு வழங்கப்படும் பணத்தை சபை அங்கீகாரம் பெருமல் வேறு துறைக்கு உபயோகிப்பது போன்ற சில விஷயங்கள் இந்த விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மின்சார விஸ்தரிப்புச் சம்பந்தமாக மாநகரசபைக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட பணத்தில் 85,000 ரூபாய் மாநகரசபையின்

(8-ம் பக்கம் பார்க்க)

## மூன்று நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வர்

### வங்கி ஊழியர் சங்கம் முடிவு

கொழும்பு, சனி

ஜூன் 11-ம் திகதி நாட்டில உள்ள எல்லா வங்கிகளிலும் வேலைகள் ஸ்தம்பிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது இதற்குகாரணம், தற்பொழுது வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள 'நஷனல் அன்ட் கிரின்வே' வங்கி ஊழியருக்கு அனுதாபமாக இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் ஜூன் 11-ம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு அடையாள வேலை நிறுத்தமொன்றை நடத்த

(8-ம் பக்கம் பார்க்க)

காலிஜிம்கானா சுவீப்

## யாழ். வாசிக்கு அதிர்ஷ்டம்!

கொழும்பு, சனி

காலி ஜிம்கான சுவீப்பில் முதல் பரிசான 22.000 ரூபாய் யாழ்ப்பாணத்திலுள்ள 62, கே. கே. எஸ், வீதியைச்சேர்ந்த திரு. எஸ். இராசரத்தினம் என்பவருக்குக் கிடைத்துள்ளது.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது டொலர் மார்க் அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14. டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:

அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

**விற்பனையாளர்**

எமது தயாரிப்புகளை ''வேனில்'' சென்று விற்பனை செய்வதற்கு ஒருவர் தேவை. குமார் இன்டஸ்றீஸ் 122, கொழும்புத்துறை கிழக்கு யாழ்ப்பாணம். 504

**மனேச்சர்**

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனேச்சர் தேவை. தராதரங்கள் J. S. C. வகுப்பு சித்தியெய்தியதுடன், கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை சித்தியெய்திய தராதரமும் வேண்டும். பிணைப்பணம்: ரூபா 1000/-. ரொக்கமும், ஆதனப்பிணையும்: ரூபா 2000/- கொடுக்கவேண்டும். சம்பளம்: ரூபா 100/- (அலவுன்ஸ் உட்பட). விண்ணப்பங்களைக் காரியதரிசி, புலோலி கிழக்கு சந்தா தோட்டம் ப. நோ. கூ. சங்கம், உத்திராவத்தை, பருத்தித்துறை. என்ற விலாசத்துக்கு 31-5-63க்கு முன் அனுப்பி வைக்கவேண்டும். 501

## விற்பனைக்கு

**காணி**

யாழ்ப்பாணம் பிரவுண் வீதி 5-ம் ஒழுங்கையில் 5 1/2 பரப்பு 3 குழி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். எஸ். ஜெயசிங்கம், 550/4 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 399

## கல்வி

**கலை, விஞ்ஞானம்**

கலை/விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு அனுபவமுள்ள (Hons) செய்த பட்டதாரிகளாலும் 3 மாத, 6 மாத, 1 வருட தமிழ், ஆங்கில சுருக்கெழுத்துக்கும் மற்றும் வர்த்தகப் பாடங்களுக்கும், ஆசிரியகலாசாலைப் பிரவேச பரீட்சைக்கான பாடங்களுக்கும் 44 வருட ஆசிரிய அனுபவமுள்ளவரால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. இத்துடன் ஆங்கிலத்திற்கும் தையலுக்கும், சிங்களத்துக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விண்ணப்பிக்கவும்: வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை/ வதிரி, கரவெட்டி. (393)

## வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய வுபரங்கள் அடங்கிய சுற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கேவுாலடி, யாழ்ப்பாணம்.

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, சனி

காலஞ்சென்ற சுருவிலூர் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான தீவுப்பகுதி கரபந்தாட்டப் போட்டியில் தாரந்தனை விளையாட்டுக் கழகத்தினர் வெற்றிபெற்றனர். புங்குடுதீவு இறுப்பிட்டிக் கழகத்தினர் இவர்களுடன் போட்டியிட்டனர்.

புளியங்கூடல் மகாமாரி கோஷ்டியினருக்கும், நயினுதீவு கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற சுற்றுப்போட்டியில் நயினைவிளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.


REGAL--JAFFNA
NOW SHOWING!
Rock Hudson
Gina Lollobrigida
in
Come September
(Panavision - color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சாந்தாராம் - சந்தியா
நடித்த
ஸ்திரி (ஹிந்தி)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ராமச்சந்திரன் வைஜயந்திமாலா
நடித்த
வாழ்க்கை

இப்பொழுது
திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவெரேலியா)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவிஸ்
தெய்வத்தாய்
இசை:
விஸ்வநாதன்—ராமமூர்த்தி


## நேரு நினைவுதினம்

உடுப்பிட்டி, சனி

''ஒரு நாட்டின் வளர்ச்சி, பொருளாதாரம், ஒற்றுமை அந்நாட்டின் மக்களின் கையிலேயே தங்கியுள்ளது. மக்கள் யாவரும் இன, மத, வித்தியாசம் இன்றி வாழ வேண்டும். இதற்காக நேருஜி பெரிதும் பாடுபட்டார். நேருவின் கொள்கைகளில்சில இலங்கைமக்களுக்கும் பொருந்தும். இதனை நாம் நன்குணரவேண்டும். உயர்ந்த லட்சியங்கள் மக்கள் ஒவ்வொருவரிடையேயும் பிறக்கவேண்டும்''.

கரணவாய் தெற்கு கலா படிப்பக மன்ற நேரு நினைவு தினவிழாவை முன்னிட்டு அன்று காலையில் நடைபெற்ற விளையாட்டுவிழாவில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்கட்குப் பரிசில்கள் வழங்கிப் பேசுகையில் பருத்தித்துறைப் பொலிஸ் அதிகாரி திரு. பி. இராஜேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினர். விழாவுக்கு ஆசிரியர் திரு. எஸ் செல்வநாயகம் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் கே. ரி. இராசசிங்கம், த. காராளசிங்கம், நெல்லை க. பேரன், க. பரஞ்சோதி ஆகியோரும் பேசினர். செல்வி சபா கருணதேவியின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. திரு. சி. தியாகேஸ்வரன் நன்றி கூறினர்.

## தொழிலாளர் சங்க கூட்டம்

வல்வெட்டித்துறை, சனி

வல்வை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பருத்தித்துறை எம். பி. திரு. க துரைரத்தினம் தலைமையில் வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது,

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர் சி பொன்னம்பலம் உபதலைவர் எஸ் பாஸ்கரானந்தவேல், செயலாளர் இ கந்சாமித்துரை, பொருளாளர் தெ இலட்சுமிகாந்தன்.

கூட்டுறவு இலாகாவின் தலைமைக் காரியாலயப் பரிசோதகர் ரி சண்முகராசா கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தார்.

## கி. மு. சங்க பொதுக்கூட்டம்

துணுக்காய், சனி

புகழேந்தி கி. மு. சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் துணுக்காய்ப்பகுதி காரியாதிகாரி திரு. மா. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

அவர் உரையாற்றுகையில் கிராமப்புற மக்கள் பொருளாதாரத்தை விருத்தி அடையச்செய்ய சிறு கைத்தொழில்களில் கூட்டாக ஈடுபடவேண்டும் எனக் கூறினுர்.

புதுவருட உத்தியோகஸ்தர்கள் வருமாறு:

தலைவர்: திரு. சி. நடராசா, உபதலைவர்: திரு. மு. சிவகுரு, காரியதரிசி: திரு. வ. குமாரராசா, உபகாரியதரிசி: திரு. பொ. சொக்கலிங்கம், தனதிகாரி: திரு. மு. லக்ஷ்மணபெருமாள். நால்வர் கொண்ட ஒருநிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## நோயாளர் கஷ்டம்

வல்வெட்டித்துறை, சனி

அல்வாய் கிராமப் பகுதியின் காசநோயாளரின் உதவிப் பணத்தையும், அவர்களுக்கு வழங்கிவந்த மருந்து வகைகளை சுகாதாரப் பகுதியினர் நிறுத்தியதைக் கண்டித்து அல்வாய் சுகாதாரச் சங்கம் நோயாளர் [illegible] யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குப் புகார் செய்துள்ளது.

# விளம்பரம்

## அறிவித்தல்

இலங்கை சட்ட ஆக்கங்கள் (அத்தியாயம் 158)இன் நிறுவை அளவைக் கட்டளைச்சட்டம் பிரிவு 32 (2) (3) இன் கீழ் சகல வியாபாரிகளுக்கும் கீழ் வரும் பகிரங்க அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

திருபணத்திற்கான, அதிகார அடையாளம் கொண்டு, பரிசோதகரால் முத்திரையிடப்படாத நிறுவையையோ அல்லது அளவையையோ அல்லது நிறுவை அல்லது அளவைக் கருவிகளையோ யாராவது நபர் விற்ருலோ அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைத்தாலோ அல்லது,

திருபணத்திற்கான அதிகார அடையாளங்கொண்டு 12 மாத கால எல்லைக்குள் பரிசோதகரால் முத்திரையிடப்படாத, ஏதாவது நிறுவையையோ அல்லது அளவையையோ அல்லது நிறுவை அல்லது அளவைக் கருவியையோ, ஏதாவதொரு வியாபாரத்திற்கோ, அல்லது ஏதாவதொரு வியாபாரத்தில் இவைகளை எந்த நேரத்திலாவது பாவிப்பிற்காகத்தன்னிடம்வைத்திருந்தால், இலங்கை சட்ட ஆக்கங்கள் அத்தியாயம் 158 பிரிவு 41இன் நிறுவை அளவைக் கட்டளைச்சட்டத்தின்கீழ், அவர் ஓர் குற்றம் புரிந்தவராகக் கருதப்பட்டு ரூபா 100/-க்கு மேற்படாத அபராதமும், மூன்று மாத காலத்துக்கு மேலாகாத சிறைத் தண்டனை இரண்டில் ஒன்றும், அல்லது அபராதமும் சிறைத்தண்டனையும்விதிக்கப்படுவதற்கு ஏதுவாய் இருப்பார்.

போயா தினத்திற்கு முந்திய நாள், போயா தினம், பகிரங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பி. ப. 2 மணிதொடக்கம் பி. ப. 4-00 மணிவரையும் நிறுவை அளவைக்கருவிகளுக்கு மாநகரசபை அலுவலகத்தில் முத்திரையிட்டுக் கொடுக்கப்படும்.

1966-ம் ஆண்டு ஜூலை 31-ம் திகதிக்கு முன்னர் வியாபாரிகள் தங்கள் நிறுவை அளவைக் கருவிகளுக்கு முத்திரைபொறித்துக்கொள்ள வேண்டும். இத்திகதிக்கு முன்னர்முத்திரை இடத் தவறியவர்கள்மீது சட்டப்படி வழக்குத்தொடரப்படும்.

(ஒப்பம் க. செல்வராசா)
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
21-5-66 442

## கேள்வி விளம்பரம்

சுழிபுரம் கிராமசபைத் தலைவரால் பருளாய் இருத்தலடி ஞேட்டு வேலைக்கான சீல்வைத்த கேள்விகள் 11-6-66 காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுக்காசாக ரூபா 50/-ம், கேள்விப் பத்திரக் கிரயமாக ரூபா 2/-ம் சுழிபுரம் கிராமசபை அலுவலகத்தில் செலுத்தியதன் மேல் 8-6-66 மாலை 4-30 மணிவரை கேள்விப்பத்திரம் வழங்கப்படும். மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் சுழிபுரம் கிராமசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்) சு. கந்தசுவாமி,
தலைவர்,
சுழிபுரம் கிராமசபை.
28-5-66. 445

## தேவை

கீழ் குறிக்கப்படும் பதவிகளுக்கு யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசம் விண்ணப்பம் கோருகின்றது. தகைமையுடையோர் 20-6-66 க்கு முன் பதிவுத்தபால் மூலம் ''கௌரவ காரியதரிசி அவர்களுக்கு, யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பிப்போர் பதிவுத்தபாலின் மேல்உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் தன்மையைக் குறிக்கவும்,

**உதவி மனேஜர் பதவி**

விண்ணப்பதாரர் ஆங்கிலம் அல்லது தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் தமிழ், ஆங்கிலம், எண்கணிதம் அல்லது கணிதம் (மூன்று பாடங்களில்) திறமைச் சித்தியும், கூட்டுறவுக் கலாசாலைப்பயிற்சி, தட்டெழுத்து, வர்த்தககணிதம் ஆகியவற்றில் அறிவும், இப்பதவி அனுபவமும்விரும்பத்தக்கது வயது: 25க்குக் கீழ்ப்படாமலும் 40க்குமேற்படாமலும் இருத்தல்வேண்டும். பிணை: உரொக்கம்ரூபா 2000/-மும் ஆதனப்பிணை ரூபா 5000/-மும்.

சம்பளம் $\frac{125/- — 200/-}{7-50 \times 10}$

அலவன்ஸ் 33 3/1%

**விற்பனையாளர்கள்**

(பெண்கள் மாத்திரம்)

விண்ணப்பதாரர் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராயும், 21வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராயும் இருத்தல் வேண்டும். நெசவு அனுபவம் விரும்பத்தக்கது. பிணை உரொக்கம் 500/-

சம்பளம் $\frac{70/- — 100/-}{2-50 \times 12}$

அலவன்ஸ் 33 3/1%

(ஒப்பம்) து. சீனிவாசகம்.
கௌரவகாரியதரிசி
443

## அறிவித்தல்

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையில் இணைச்செயலாளரில் ஒருவராகப் பதவி வகித்த திரு. செ. பங்கிராஸ் என்பவரை 26-5-66-ல் நடைபெற்ற பொது நிர்வாகசபை நம்பிக்கையின்மை காரணமாகப் பதவி நீக்கம் செய்துள்ளதென்பதை அறியத்தருகின்ரேம்.

எனவே திரு. செ. பங்கிராஸ் அவர்களுடன் மகாசபை சம்பந்தமான எந்தத் தொடர்புகளையும் வைக்க வேண்டாமென்று பொது மக்களையும் ஸ்தாபனங்களையும் கேட்டுக்கொள்கின்ரேம்.

நா இராமலிங்கம்
இணைச்செயலாளர்

ஆ. ஹென்றி
தலைவர்
26-5-66. (446)

## இன்றைய விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று ஞாயிற்றுக்கிழமை சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைப் பேராசிரியர் திரு. சி. பாலசுப்பிரமணியம் நல்லூர் செங்குந்தாக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ் சங்கத்திலும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் விரிவுரைகள் நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புகண்டா மன்னர் தப்பி ஓடிவிட்டார்?

## உகண்டா அதிபர் ஓபொடே உத்தியோக ரீதியில் அறிவிப்பு

### அரண்மனை சண்டையில் 1000 பேர் கொல்லப்பட்டனராம்

கம்பாலா, மே 28

புகண்டா மன்னர் கபாகா, கடந்த செவ்வாய்க்கிழமை அவரது அரண்மனை கைப்பற்றப்பட்டதற்கு முன்பே தப்பிச் சென்றுவிட்டதாக உகண்டா அதிபர் மில்டன் ஓபொடே கூறினர். மன்னரின் தற்போதைய இருப்பிடம் தெரியவில்லை என்றும் அவர் கூறினர்.

அரண்மனையைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்ற சண்டையில் 40 பேர் கொல்லப்பட்டதாகவும், 600 பேர் சிறைப்பிடிக்கப்பட்டதாயும் ஓபொடே மேலும் அறிவித்தார்.

கபாகாவின் மறைவு குறித்து முதல் தடவையாக இப்போதுதான் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் அரண்மனைச் சண்டையில் 1000 பேர் கொல்லப்பட்டதாக உத்தியோகப்பற்றற்ற செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில், நாட்டில் சட்டவிரோதச் செயல்களை ஒழிக்கும் விஷயத்தில் உதவி புரியும்படி உகண்டா அரசாங்கம் மக்களைக் கேட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து கபாகாவுக்கு ஆதரவான ஆயுதத்தாக்குதல் ஒன்று ஏற்படவிருப்பதான அறிக்கைகளை பொலிசார் பரிசோதித்துக்கொண்டிருந்த சமயத்தில், அரசாங்கம் இவ் வேண்டுகோளை விடுத்தது.

உகண்டாவின் 4 ராஜ்யங்களில் மிகப் பெரிதான புகண்டாவில் வாகனங்களை வழி மறிக்கும் ஆயுதக் கொள்ளைக்காரர்களை கண்காணிக்கும் பொருட்டு பொலிசார் கம்பாலாவுக்கு வெளியே ரோந்து சுற்றி வருகிறார்கள்.

அதேசமயம் வருகிற 30-ந் திகதிக்குள் புகண்டாவிலிருந்து உகண்டா அரசாங்கம் வெளியேறவேண்டும் என்ற (சர் எட்வர்ட் முடேஸா) கபாகாவின் இறுதி எச்சரிக்கையை வற்புறுத்தும்படி, மக்களைக் கேட்டுக்கொள்ளும் துண்டுப் பிரசுரங்கள் கம்பாலா பகுதியில் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஆயுதப் போராட்டத்திற்கு மக்கள் தயாராகுமாறும் இதில் கோரப்பட்டிருந்தது.

## கம்போடியாவில் 10,000 வடவியட்னும் துருப்புகள்?:

### தென்வியட்னமை தாக்கவாம்

வாஷிங்டன், மே28

தென்வியட்னமைத் தாக்கும் பொருட்டு 10,000 வடவியட்னும் துருப்புக்கள் கம்போடியாவுக்குள் நுழைந்திருப்பதாய், அங்கிருந்து திரும்பியுள்ள அமெரிக்க ஜெனரல் ஒருவர் கூறினர்.

அதே சமயம் பௌத்தர்களின் மற்றொரு நகரமான ஹியூவிலிருந்து அமெரிக்க அதிகாரிகளும், அமெரிக்க சிவிலியன்களும் பத்திரமான இடங்களுக்கு வெளியேறியிருக்கிறார்கள்.

அங்கு உண்ணுவிரதமிருந்த 116 பிக்குகளும், பிக்குணிகளும் தங்கள் உண்ணுவிரதத்தை இப்போது கைவிட்டிருக்கிறார்கள்.

ஹியூவுக்கு அரசாங்கத் துருப்புக்களை அனுப்பதாம் விரும்பவில்லையென பிரதமர் ஏர்மார்ஷல் கி அறிவித்திருக்கிறார்.

நேற்று சைகோனில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தோ-சீன சம்பந்தமான சர்வதேச கண்காணிப்பு கமிஷன் அடுத்த வாரம் ஹானேயில் 4 நாள் கூட்டத்தை நடத்தவிருக்கிறது. வடவியட்னும் மீதான விமானத் தாக்குதலுக்குப் பின் கமிஷன் கூட்டம் இங்கு நடைபெற இருப்பது இதுவே முதல் தடவையாகும்,

## ரஷ்ய—பிரெஞ்சு கார் உற்பத்தி

மாஸ்கோ, மே 28

பிரெஞ்சு 'ரெனல்ட் கம்பெனி ரஷ்யாவில் கார்களை உற்பத்திசெய்ய உதவும் ஒப்பந்தம் ஒன்றுகைச்சாத்திடப்பட்டிருக்கிறது. வருடம் 12000 கார்களை அது உற்பத்திசெய்யும்.

கார் உற்பத்தி விஷயத்தில் ருமேனியாவுடனும் ரஷ்யா பேச்சு நடத்திவருகிறது.

ஏற்கனவே இத்தாலிய பியட்கார்கம்பெனி வருடம் 8 லட்சம் கார்களை உற்பத்தி செய்யும் ஆலையை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய—அமெரிக்க நெருக்கடி தீவிரம்

வாஷிங்டன், மே 28

நிலைமை சீர்திருந்தும் வரை அமெரிக்கா தனது ஆயுதப்படைகளைக்குறைக்க உத்தேசிக்கவில்லைஎன வெளிநாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்க் கூறினர்.

ஐரோப்பாவில், சம்பந்தப்பட்ட நாடுகள் விரும்பும் வரை நேட்டோ பலத்தை அமெரிக்கா பராமரித்துவருமென்றும் அவர் கூறினர்.

கிழக்கு, மேற்கு நெருக்கடி பற்றி ரஸ்க் குறிப்பிடுகையில், அமெரிக்க—ரஷ்ய உறவு வியட்னும் காரணமாக மிகவும் நெருக்கடியாக இருக்கிறது என்ருர்.

## சந்திரனுக்கு அனுப்பும்

கேப்கென்னடி, மே 28

சந்திரனில் மெதுவாக இறங்கும் ராக்கெட் ஒன்றை வருகிற திங்கட்கிழமை அமெரிக்கா அனுப்பும் என அறிவிக்கப்பட்டது.

## குண்டுகளுடன் மூவர் கைது

புதுடில்லி. மே 28

பாரமுல்லாவில் பாகிஸ்தானில் செய்யப்பட்ட கைக்குண்டுகளுடன் மூவர் கைது செய்யப்பட்டார்கள்.

## "அக்ஸாய்சின் பகுதியை சீனவுக்கு கொடு!"

### இந்தியாவுக்கு இடதுசாரி கோபாலன் புத்திமதி

கள்ளிக்கோட்டை, மே 28

"சீனவுடன் தனது எல்லைத்தகராறைத் தீர்க்கும் விஷயத்தில் இந்தியா முதல் முயற்சி மேற்கொள்ள வேண்டும்" என இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ஏ. கே- கோபாலன் நிருபர்களிடம் கூறினர்.

"எல்லா மட்டத்திலும் சீனவை எதிர்ப்பது என்ற இந்தியாவின் கொள்கை ஏகாதிபத்திய வாதிகளுக்கே நன்மைசெய்யும். பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் கொள்கை இல்லாவிட்டால் சீனவுடன் நமதுபிரச்னை தீராது. பிரச்னை தீராவிட்டால்நாட்டில் அமைதி இருக்காது" என்றும் கோபாலன் குறிப்பிட்டார்.

"அக்ஸாய்சின் பகுதியை சீனவுக்குக்கொடுத்துவிட்டு, அதற்குப்பதிலாக தகராறிலுள்ள வேறுசில பகுதிகளை நாம் பெறுவோம். இதன் மூலம் சீனவுடன் அனக்கிரமிப்பு ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வோம்" என்ருர் கோபாலன்.

பாகிஸ்தான், மீஸோ, நாஹாலந்துவிஷயத்தில் ஒரு அரசியல் தீர்வு காணவும் இந்தியா முயலவேண்டும். காஷ்மீர் பிரச்னைஎன ஒன்று கிடையாது எனக்கூறுவதில் அர்த்தமே இல்லை. டாஷ்கண்ட் உணர்ச்சியுடன் இப் பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வுகாண முடியும்" என்றும் அவர் கூறினர்,

"இந்தியா தன் ராணுவத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு 900 கோடி ரூபாய் செலவழிக்கிறது. ஆனல் மேற்கண்ட பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதின்மூலம் இந்தப்பணத்தின் பெரும் பகுதியை பொருளாதார அபிவிருத்திக்கு உபயோகிக்கலாம்" என்றும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சியினர் இடதுசாரி—வலதுசாரி பிரிவினரிடையே இணைப்பு ஒருபோதும் சாத்தியமில்லை என்றும் கோபாலன் மொழிந்தார். (பி டி ஐ)

## பலநாடுகளில் நேரு சிரார்த்தம்

புதுடில்லி, மே 28

காலஞ்சென்ற நேருவின் 2வது சிரார்த்த தினம் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

காலையில் சாந்திவனத்தில் நடைபெற்ற விசேஷ வைபவத்தில் ஜனதிபதி, உபஜனதிபதி, பிரதமர் உள்ளிட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர் முப்படைகளையும் சேர்ந்த 150 வீரர்கள், துப்பாக்கிகளை தலைகீழாகப்பிடித்து மரியாதை தெரிவித்தனர்.

சமாதிக்குச்செல்லு முன், நேருவாழ்ந்த தீன்மூர்த்தி மாளிகைக்கு பிரதமர் இந்திரா சென்ருர்.

(பி. டி. ஐ)

## சின்னமௌலானு கச்சேரி

யாழ்ப்பாணம், ஞாயிறு

திங்கட்கிழமை நடைபெறும் அளவெட்டிக் கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் திருவிழாவில் இந்தியப் புகழ் நாதஸ்வர வித்துவான் ஷேக் சின்னமௌலானுவின் நாதஸ்வர கச்சேரியும் இடம்பெறும்.

கல்கத்தா, மே 28

வடவங்காளத்தில் இடைவிடா மழை காரணமாக, பல நதிகள் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகின்றன. இதனல் நெல், சணல்பயிர்கள் நீரில் மூழ்கின. கூச்பிகாரிலும் ஒரே வெள்ளம்.

## சைபீரியாவில் பெரும் எண்ணெய் தேடும் முயற்சி

### ராட்சஸ ரஷ்ய இயந்திரங்கள் இயக்கம்

மாஸ்கோ, மே 28

சைபீரிய தரிசு நிலங்களில் எண்ணெய் கண்டுபிடிக்கும் முயற்சியில் ராட்சச ரஷ்ய இயந்திரங்கள் இறங்கியிருக்கின்றன.

அரை நூற்ருண்டுக்கு முன் டெக்ஸாஸில் மேற்கொண்ட முயற்சியை இது ஞாபகமூட்டுகிறது.

பரந்த சைபீரிய நிலத்தில் 4,200 கோடி டன் எண்ணெய் இன்னும் புதையுண்டு கிடப்பதாக ரஷ்யர்கள் கருதுகிருர்கள். இது தற்போதைய அடிப்படையில் ரஷ்யாவின் 120 ஆண்டு தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

உலக எண்ணெய் உற்பத்தி நாடு என்ற அமெரிக்காவின் ஸ்தானத்திற்கு, ரஷ்யா தீவிரமாகப் போட்டியிட்டு வருவதன் விளைவே இது.

நாட்டின் தற்போதைய ஐந்தாண்டுத் திட்டத்தில், சைபீரிய எண்ணெய் தேடும் முயற்சி பெரும்பங்கு வகிக்கிறது. 1970-ம் ஆண்டுக்குள் 300 புதிய கிணறுகளை தோண்டும் உத்தரவு அமுலில் இருக்கிறது.

கண்டு பிடிக்கப் படாத உலக மொத்த எண்ணெயும் நிலவாயும் மூன்றில் ஒரு பகுதி சைபீரியாவில் இருப்பதாக ரஷ்ய பூதத்துவ விற்பன்னர்கள் கருதுகிருர்கள்.

கஸாக்கிஸ்தான், காஸ்பியன்கடல் பகுதி ஆகியனவும் எண்ணெய் தேடும் பகுதிக்குள் அடங்கியுள்ளன.

பசிபிக் துறைமுகமான மக்கூகாவுக்கு 4500 மைல் நீள எண்ணெய் சப்ளை குழாய் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(பி. டி. ஸி)

## சமஸ்கிருத மகாநாடு

பங்களூர், மே 28

ஜனதிபதி ராதாகிருஷ்ணன் இங்கு சமஸ்கிருத விஸ்வபரிஷத் மகாநாட்டை நேற்று துவக்கிவைத்தார். உள்நாட்டையும், வெளிநாடுகளையும் சேர்ந்த 1000 பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

சமஸ்கிருதம் எக்காலமும் அழியாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றும், பிறகலாச்சாரங்களிலுள்ள நல்லவற்றை ஏற்கவேண்டுமென்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் அப்போது கூறினர்.

## பாதுகாப்பு சபைக்கு காஷ்மீர் பிரச்னை.

ராவல்பிண்டி, மே 28

காஷ்மீர் பிரச்னையை மீண்டும் பாதுகாப்புசபையில் எழுப்புவது குறித்து. பாகிஸ்தான் அரசாங்கம் பரிசீலித்து வருவாய் அந்நாட்டுசட்டசபையில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## சூ விஜயம் ஒத்திவைப்பு

பீகிங், மே 28

சீனப் பிரதமர் சூ என்லாயின் ஐக்கிய அராபியக் குடியரசு விஜயம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

காரணம் அறிவிக்கப்படவில்லை. திரு. சூ அடுத்தமாதம் கெய்ரோ செல்லவிருந்தார்.

## 6 பிரெஞ்சு விமானங்கள் நொறுங்கி வீழ்ந்தன!

மாட்ரிட், மே 28

பிரெஞ்சு விமானப்படையைச் சேர்ந்த 6 சூப்பர்ஸோனிக் விமானங்கள் கிட்டத்தட்ட ஏககாலத்தில் விழுந்து நொறுங்கின.

வானநிலைக் கோளாறும், எண்ணெய்ப் பற்ருக்குறையும் இதற்குக் காரணம்.

தென் ஸ்பெயினில் அவை பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் இந்த விபத்து ஏற்பட்டது. விமானிகள் பாரசூட் மூலம் குதித்துத் தப்பினர். இதுசம்பந்தமாக விசாரணை ஒன்று நடைபெறவிருக்கிறது.

அதேசமயம் மேற்கு ஜெர்மன் விமானப்படையைச் சேர்ந்த சூப்பர்ஸோனிக் [illegible] விமானமொன்று நொறுங்கி வீழ்ந்தது. கடந்த 1961ம் ஆண்டுக்குப்பின் நொறுங்கிய ஸ்டார் விமானங்களில் இது 58வது ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பணத்தை சேமிக்க வேண்டியதே. ஆனால் அதை நம்பியிராமல் தெய்வத்தையே நம்பியிருங்கள். சேமித்த பணம் உங்களுடையதென்று நினைக்கவேண்டாம். அது கடவுளுடையது. தெய்வத்துக்காகவே அதாவதுஎல்லாருடைய சேவைக்காகவே அதைச் செலவழியுங்கள். அதனால் உங்களுக்கு நீங்களே உண்மையில் உதவி செய்து கொண்டவராவீர்கள். —சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna; Phone: 337

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 16 உ (29-5-66)

# இருக்கும் இடமே சிறந்தது

இலங்கைப் பிரஜாவுரிமை பெற்ற இந்தியவம்சாவளி மக்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறுமாறும் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கப் படுமென்றும் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு எம். திருச்செல்வம் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை அருந்ததியர் சங்க ஆண்டு விழாவில் பேசுகையில் அழைப்பு விடுத்திருக்கிறார். ஹட்டனிலும் சில வாரங்களுக்கு முன் இதே போன்று அழைப்பு விடுத்திருந்தார் தனிப்பட்ட முறையிலேயே தாம் இந்த அழைப்பை விடுப்பதாக அவர் கூறியிருக்கிறார். எனினும் அரசாங்கத்தில் ஓர்அமைச்சராகவிருக்கும் திரு திருச்செல்வம், வடக்கிலும் கிழக்கிலும் வந்து குடியேறுங்கள் என்று இந்திய வம்சாவளி மக்களை, தமிழ் பேசும் மக்களை அழைப்பது அவரது நோக்கம் எதுவாக இருக்குமென பலருக்கும் பலவிதமான சிந்தனையை ஏற்படுத்தக்கூடியதாகும். வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கே, அரசாங்கம் குடியேற்ற திட்டங்களில் இடம் கொடுக்கவில்லையென்றும் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களினால் வடக்கு, கிழக்கு மாகாணத்தவர் பாதிக்கப்படுகின்றனரென்றும் பொதுவாகஇவ்விருமாகாணத்தவரும் குறைகூறி வந்துள்ளனர். இந்நிலையில் இந்திய வம்சாவளியினரை இங்குவந்துகுடியேறும்படி எப்படிக் கேட்பது? வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்குள்ளேயே பல்வேறு பிரச்னைகளும் கஷ்டங்களும் உள்ளன. இந்நிலையில் இந்திய வம்சாவளியினர் இங்கு வந்து சுகவாழ்வு வாழ்வது சுலபமா?

தென்னிலங்கையிலும், மலைநாட்டுப் பகுதிகளிலும் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் பிரஜாவுரிமை, வாக்குரிமை பெறுவதிலும் மற்றும் புதிய புதிய சட்டதிட்டங்களினாலும் பலவித கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கலாம் ஆனால் அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தலைமுறையாக அப்பகுதியிலேயே வாழ்ந்து, அப்பகுதிச் சூழலிலேயே ஒன்றிப்போனவர்கள். அரசியல் காரணமாக அப்பகுதிகளில் பிரச்னைகள் தோன்றிய போதிலும் அங்குள்ள இதர சமூகத்தினருடன் அவர்கள் பல்லாண்டுகளாக ஒற்றுமையாக வாழ்ந்துவருகின்றனர். தமிழ் மொழியைப்பேசுபவர்கள் என்பதற்காகவும் தமிழ்ப் பரம்பரையினர் என்பதற்காகவும் அவர்களை இங்கு அழைப்பது, உள்ளதையும் கெடுத்து, கண்ணைக் கட்டிக்காட்டில் விடுவதுபோலாகும். அவர்களை இங்கே அழைக்க வேண்டாம், அவர்கள் எங்கிருந்தாலும் நன்றாகவாழட்டும் அவர்களுக்குக்கஷ்டம் நேரிடும்போது நாம் உதவியும், ஒத்துழைப்பும், பாதுகாப்பும் அளித்தால் அதுவே போதும்.

# இலக்கியத்துக்கு வேலியா?

தென்னிந்தியாவிலிருந்து உதவாத, பிரயோசனமற்ற இலக்கிய நூல்களும், சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இங்கு இறக்குமதியாகின்றனவென்றும் இவற்றைத்தடை செய்யவேண்டுமென்றும் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில சகவர்த்தமானியொன்று தனது ஆசிரியத் தலையங்கத்தில் கேட்டுள்ளது.

குப்பை இலக்கியங்கள், ஆபாச நூல்கள் தென்னிந்தியாவிலிருந்து தான் இங்கு வருகின்றனவா? வேறு எந்த நாட்டிலிருந்தும் இங்கு வருவதில்லையா? தென்னிந்திய திரைப்படங்கள், தென்னிந்திய நூல்கள் ஆகியவற்றை தடைசெய்ய வேண்டுமென்றும் அவை நமது கலாசாரத்தைக் கெடுக்கின்றன வென்றும் சமீபகாலத்தில் ஒரு தவறான பிரசார இயக்கம் ஆரம்பமாகி யிருக்கிறது. இதன் அடிப்படை நோக்கங்கள் வேறாகத்தானிருக்கமுடியும். இந் நாட்டில் வந்து குவியும் ஆங்கில ஆபாச இலக்கியங்களைப்பற்றியும் திரைப்படங்கள்பற்றியும் நாம் இங்கு இப்பொழுது குறிப்பிடவிரும்பவில்லை.

இந்நாட்டில் வாழும் முப்பது லட்சம் தமிழ் மக்களின் தேவையை நிறைவேற்றக்கூடியவகையில் இலக்கியம் படைக்கக்கூடிய எழுத்தாளர்களும், கவிஞர்களும், சஞ்சிகைகள், பத்திரிகைகளும் இங்கிருப்பதாகவும் அந்தத் தலையங்கம் குறிப்பிடுகின்றது. இங்குஎழுத்தாளர்கள்இருக்கின்றனர் அவர்களுக்கு ஆற்றலும் உண்டு. இலங்கை எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புக்களை இலங்கைத் தமிழர் மட்டும் தானா படித்துச் சுவைக்க வேண்டும்? நமது எழுத்தாளர்களின் படைப்புக்களை, உலகில் பரந்து வாழும் நான்குகோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் படித்துப் பயன்பெறக் கூடாதா? 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்றார் பாரதியார். நமது படைப்புக்கள் திறமையானவையாக இருந்தால், தென்னிந்திய நூல்கள் நமது படைப்புக்களை எப்படிப் பாதிக்கச்செய்ய முடியும்?

இலக்கியத்துக்கு வேலி கட்டுவது முறையுமல்ல, நியாயமுமல்ல. நமது எழுத்தாளர்கள் தரமான இலக்கியத்தைப் படைக்கட்டும். நல்ல சரக்கென்றால் அதற்கு உள்ளூரிலும், வெளியூரிலும் மதிப்பிருக்கும்.

# செக்கோஸ்லாவாக்கியாவின் கல்வித்திட்டம்

— பெற்ர் பௌஸ்றகா —

**இலங்கையின் கல்வித்திட்டம் பற்றி கல்வி அமைச்சர் வெள்ளையறிக்கை சமர்ப்பித்துள்ள இச் சமயத்தில் இதரநாடுகளின் கல்வித் திட்டங்களையும் அறிந்து கொள்வது நல்லது. செக்கோஸ்லாவாக்கியாவின் கல்வித் திட்டம் இங்கு சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.**

செக்கோஸ்லாவாக்கியா ஓர் சமதர்ம, கைத்தொழில் நாடாகஉருமாறிய பிற்பாடு அதன் கல்வித் திட்டத்தில் அபிவிருத்தி ஏற்பட ஏதுவாக அமைந்துள்ளது.

### சர்வகலாசாலைகளும் கல்லூரிகளும்

செக்கோஸ்லாவாக்கியாவின் 140 இலட்ச சனத்தொகையினருக்கு 41 சர்வகலாசாலைகளும், பல கல்லூரிகளும், 105வேறுபாடான துறைகளைப் போதிக்கும் சௌகரியம்உள்ளதாய் உள்ளன. இவைகளில் 144,777 மாணவர்கள் கல்வி பயிலுகின்றார்கள். அதில் 52,000 மாணவர்கள் ஏதும் வேலைகள் செய்துகொண்டேகல்வி பயிலுகின்றனர்.

செக்கோஸ்லாவாக்கியாவின் சர்வகலாசாலைகள், பெருமைப்படத்தக்க தொன்மைமிகு வரலாற்றினை உடையன. பிறேக் சாள்ஸ் சர்வகலாசாலை 1948-ம் ஆண்டு ஸ்தாபிதமானது. இதன்பின்பே இச் சர்வகலாசாலையின் வெவ்வேறு துறைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அவைகள் சிலவற்றின் விபரம் பின்வருமாறு:-

1707-ல் தொழில் நுட்பக் கல்லூரி, 1749-ல் சுரங்கத் தொழில் நுட்பக் கல்லூரி, 1779-ல் நுண்கலைக்கல்லூரி.

சமீபத்தில் ஸ்தாபிதமாகிய கல்லூரிகள் சிலதுறைகளில் விசேடத்துவம் பெற்றவைகளாகும். உதாரணமாக, அணுபௌதீகம், இரசாயனத்தொழில் 'நுட்பம், போக்குவரத்து, விவசாயம், பொறியியல், நூல்நூற்புத் தொழில் நுட்பம் ஆகியவற்றிற்கான கல்லூரிகள். சங்கீதம், நாடகம் ஆகியனவற்றிற்கான கல்லூரியில், சங்கீதப்பகுதி, அரங்கப் பகுதி (பொம்மை ஆட்ட மாணவர்களுக்கான வகுப்புகள் உட்பட) திரைப்பட டெலிவிஷன் பகுதியாகிய பிரிவுகள் உள

சர்வகலாசாலை வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தினை ஸ்லோவாக்கியாவில் காணமுடியும். அங்கு 1948ல் மொத்தமாக நான்கு சர்வகலாசாலையும் 9,000 மாணவர்களும் மட்டுமே இருந்தனர். ஆனால் இன்று அங்கு பதின்மூன்று சர்வகலாசாலைகளும், 50,000 மாணவர்களும் உளர்.

அபிவிருத்தி அடையும் நாடுகளில் இருந்து வந்த 4,000 வெளிநாட்டு மாணவர்கள் கற்கும்'17 நவம்பர் சர்வகலாசாலையே' செக்கோஸ்லாவாக்கியாவில் விசேடத்தன்மை வாய்ந்தது. இங்கு அநேக வெளிநாட்டு இளம் பட்டதாரிகள் விசேட ஆராய்ச்சி வகுப்புகளுக்காக வருகின்றனர். செக்கோஸ்லாவாக்கியாவில் உள்ள மாணவர்கள் கற்பதற்கோ, பரீட்சைக்கோ பணம்செலுத்தும் வழக்கம் இல்லை. மாணவர்களது பெற்றோர்களினது சமூக நிலைக்கு ஏற்ப உபகாரச் சம்பளத்துடன் இலவசக்கல்வி அளிக்கப்படுகின்றது. இவர்கள் பரீட்சையில் மிகவும் திறமை காட்டுவார்களாயின் உடன் அவர்களுக்குக் கொடுக்கப்படும் மான்யத் தொகையினை அரசாங்கம் அதிகரிக்கின்றது. சர்வகலாசாலைகளிலும், கல்லூர்களிலும் கற்கும் மாணவர்களின் மொத்தத்தில் மூன்றில் ஒரு தொகையினருக்கு மேல், சர்வகலாசாலையில், இன்றேல் கல்லூரிகளில் உள்ள விடுதிகளில்தான் தங்குகின்றார்கள்.

ஆரம்ப, மத்திய பாடசாலைகளில், எண்ணிக்கையான ஆசிரியர்களின் சம்மதத்துடன் தங்கள் தகுதிகளுக்கு ஏற்ப, ஆர்வமான பாடங்களைத்தெரிவு செய்யலாம். அட்சர, கேத்திர கணிதங்களில்திறமை உடைய மாணவர்கள் மேற்கொண்டு சில மணித்தியாலங்கள் இப்பாடங்களைப்படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றன. அது போல மொழியியல் ஆர்வமுள்ளவர்கள் இரண்டு அந்நிய மொழியினைப் படிக்கவேண்

(5-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

# போயா விடுமுறை தினங்கள்

ஞாயிற்றுக் கிழமைகளுக்குப் பதிலாக இலங்கையின் பெரும்பான்மை மதத்தவரான பௌத்தர்களின் பூஜா தினமான போயா தினங்களை விடுமுறையாக்கியதற்காக மக்கள் அரசாங்கத்தை வாழ்த்துகிறோம். இந்துக்களாகிய எமக்கு போயா நாட்கள் நன்நாட்களே. நாங்கள் அத் தினங்களில் விரதமனுட்டிப்பது கண்கூடு. ஆகவே போயா விடுமுறையை நாங்கள் வரவேற்றோம். ஆனால் நாங்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாக நடந்து விட்டது. இந்து பௌத்த போயா தினங்கள் ஒரே நாட்களில் வருமென்றே எதிர்பார்திருந்தோம். ஆனால் நடைமுறையில் பார்க்கும் போது இரு போயா தினங்களும் வெவ்வேறு நாட்களில் வந்து இந்துக்களுக்கு இடர் விளைவிக்கின்றது. அப்படி வருவதற்கு காரணம் என்னவெனில், அமாவாசை, பூரணை, அட்டமி இவைகள் ஆரம்பமாகும் நாட்களையே பௌத்தர்கள் போயா தினமாகக் கொள்கின்றனர். இந்துக்களோ அவைகள் எந்த நாட்களில்கூடியகாலம் நிற்கின்றதோ அந்நாளையே கைக் கொள்கின்றனர். கிறிஸ்தவ சமயத்தினரும், முஸ்லிம் சமயத்தினரும் தங்களுக்கு வேண்டிய நாட்களில் இரு மணித்தியாலங்கள் ஒய்வு கேட்கவும் இந்துக்களாகிய நாம் எதுவும் கேளாமல் இருந்ததன் காரணம் இந்து பௌத்த போயா தினங்கள் ஒரே நாளில் வருமென்று எண்ணியிருந்தமையேயாகும். இந்துக் கணிதப் படி வரும் அமவாசை, பூரணை, அட்டமி நாட்களில் மூன்று மணித்தியாலங்களைத் தானும், இந்துக்களாகிய எங்களுக்கு ஒய்வு தந்து எங்கள் விரதத்தை முறைப்படி அனுட்டிக்க உதவ வேண்டும்.

திக்கம்
இந்து மன்றத்தினர்.

# ஐயாறன் எழுதுவது

கொழும்புக்குச் சென்றிருந்தேன். அங்கு என் மனதைக் கவர்ந்தவர்கள் மொறிஸ்தீவிலிருந்து வந்திருந்த இளம் அருணாசலம் தம்பதிகள். அருணாசலம் இலங்கையைச் சேர்ந்தவராம். மிகச் சிறிய வயதிலேயே அங்கு சென்றுவிட்டார். இப்போது அவர் அங்கு ஓர் ஆசிரியர். மனைவி சின்னம்மாவும் ஆசிரியர் தான். பிரெஞ்சும், ஆங்கிலமும் கற்பிக்கிறாராம். அத்தீவிலேயே பிறந்தவர். இருவருக்கும் இரு வருடங்களுக்கு முன் தான் விவாகமாகியது.

அருணாசலம் நன்கு தமிழ் பேசுகிறார். ஆனால் மனைவியார் தயங்கித் தயங்கித் தான் தமிழ்பேசமுடிகிறது. இருவரும் கோலாலம்பூரில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு இலங்கை மார்க்கமாக இந்தியா சென்றிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

மொறிஸ்தீவு எங்கிருக்கிறது? எப்படி அங்கு செல்வது? அங்கு எவ்வளவு தமிழர் இருக்கிறார்கள்? அவர்கள் நிலையென்ன? இதைப் பற்றியெல்லாம் பல ருசியான விவரங்களை இருவரும் தெரிவித்தனர். இலங்கைக்கு மேற்கிலும், ஆபிரிக்கக் கரையை ஒட்டிய மடகாஸ்கர் தீவுக்குக் கிழக்கிலுமுள்ள சிறிய தீவு தான் அது. சுமார் ஒரு லட்சம் தமிழர் அங்கு வாழ்கின்றனர். என்றாலும் அவர்களில் பெரும்பாலோரும் வீட்டிலே தமிழ்பேசுவதில்லையாம். ஒருசிலருக்கு மட்டுமே தமிழ் பேசத் தெரியும். வீட்டிலே அவர்கள் பேசுவது பிரெஞ்சும் ஆங்கிலமும் தான்! என்றாலும் அவர்கள் தங்கள் சமயத்தைக் கைவிடவில்லை. பல கோயில்களுள்ளன. கூட்டுப் பிரார்த்தனைகள் நடக்கின்றன. தமிழகத்திலிருந்து 3 குருமார்களைக் குடும்பத்துடன் அழைத்துவந்து கோயில் பூஜை, சமயச் சடங்குகள் முதலியவற்றை நடத்துவதாயும், சமயப் பற்று அதிகமிருப்பதாயும், இப்போது தமிழில் புதிய ஆர்வம் ஏற்பட்டுள்ளதாயும் தமிழ் படிப்பிக்கப்படுவதாயும் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

பிரிட்டிஷ் காலனியாக இருந்துவரும் மொறிஸ் தீவுக்குச் சிக்கிரத்தில் அரசியல் சுதந்திரம் வழங்கப்பட இருக்கிறதாம். மிகச் சிறுபான்மையினராக இருக்கும் தமிழர் பிறர் ஆதிக்கத்துக்கு உட்பட்டு தங்கள் உரிமைகளை இழந்துவிட நேருமோவென்று அஞ்சுவதாகத் தெரிகிறது.

சென்னை முதலமைச்சரை மலாயாவில் சந்தித்து மொறிஸ் தமிழர் பீதியைப் பற்றித் தெரிவித்ததாயும் அரசியல் சுதந்திரத்தால் தமிழருக்குப் பாதகமேற்படாமல் தடுக்கக்கூடுமான பாதுகாப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தினர் ஆசிரியர் அருணாசலம். சென்னையிலும் இது பற்றிப் பக்தவத்சலத்தாரிடம் பேச இருப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து மொறிஸுக்கு நேர் கப்பல், விமான போக்குவரத்து கிடையாது. ஒன்று கிழக்கிலுள்ள சிங்கப்பூருக்குச் சென்று அங்கிருந்து நேரே மொறிஸுக்குக் கப்பலில் செல்லலாம் அல்லது பம்பாயிலிருந்து ஆபிரிக்காவிலுள்ள மொம்பாஸாவுக்குச்சென்று அங்கிருந்து வரலாம்.

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் சென்று குடியேறுங்கள்

## பிரஜாவுரிமை பெற்ற இந்தியர்களுக்கு கோரிக்கை

கொழும்பு, சனி

இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுள்ள இங்குள்ள இந்திய வம்சாவளி மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வந்து குடியிருக்க வேண்டுமென்றும் இவர்களுக்கு தம்மாலியன்ற உதவிகளை அளித்து அவர்களைப் பாதுகாப்பதாகவும் உள்ளூராட்சி மந்திரி செனட்டர் மு. திருச்செல்வம் கொழும்பு நராயணகுரு மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை அருந்ததியர் (தமிழர்) சங்க 34-வது ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினார்.

விழாவுக்கு சங்கத் தலைவர் திரு. பெ. வேலு தலைமை வகித்தார்.

மந்திரி திருச்செல்வம் தொடர்ந்து பேசுகையில் இந்தியாவுக்குச் செல்பவர்கள் சந்தோஷமாகச் செல்ல வேண்டுமென்றும் வளமிக்க இந்தியநாட்டில் உங்கள் அனைவருக்கும் இடமுண்டு என்றும் கூறினார்.

போதனா மொழி பற்றி அவர் கருத்து வெளியிடுகையில், தமிழ் மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட குழந்தைகளுக்குப் போதனா மொழி தமிழாகவே இருக்க வேண்டுமென்று கூறினார்.

கூட்ட ஆரம்பத்தில் திரு. ஊர்காவலன் கொடியேற்றி வைத்தார் சங்கப்பொதுக் காரியதரிசி திரு. மூ. மு. சுந்தரராசன் அறிக்கை வாசித்தார். திரு. கே. பி. ஹரன், திரு. மூ. வேலாயுதம் திரு. எம். பி. பாரதி, திரு. எம். டானியல் ஆகியோரும் பேசினர்.

எதிர் வரும் பொதுத் தேர்தல்களிலும் ஸ்தலஸ்தாபன தேர்தல்களிலும் அருந்ததியர் சங்கம் பங்குபற்றுவதென்றும் மற்றும் 14 தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# கிணற்றில் பெண்ணின்சடலம்

## கணவனுக்கு ரிமாண்ட்

வல்வெட்டித்துறை, சனி

தொண்டமானாற்றுக் கருகாமையிலுள்ளகெருடாவில் என்னுமிடத்தில் சிற்றம்பலம்துரைராசாவின் மனைவி அரியம்மா என்பவர் தமது வீட்டுக்கிணற்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் சம்பவம் நடைபெற்றஇடத்திற்குச்சென்று விசாரணைகளை நடத்தினார்.

விசாரணையின்போது செல்வத்துரை சபாநாதன் என்பவர் சாட்சியமளிக்கையில்; சம்பவம் நடைபெற்ற அதிகாலை 4-30க்கு இறந்தவரின் வீட்டில் ''ஐயோ, ஐயோ'' என்ற சத்தம் கேட்டதாகவும், தான் அச்சத்தத்திற்கு வீட்டிலிருந்து வெளியில் வந்து பார்த்தபோது கணவனும் மனைவியும் கிணற்றடியில் சண்டை செய்து கொண்டு நின்றதாகவும், அப்பொழுது இறந்தவரை கணவன் கிணற்றில் தள்ளி விழுத்தியதாகவும் தெரிவித்தார்.

நடராசா நல்லம்மா என்பவர் சாட்சியமளித்தபின், மாஜிஸ்டிரேட் இறந்தவரின் கணவனானதுரைராசாவைக் கைதுசெய்ய பொலிஸாருக்குஉத்தரவிட்டுயூன் மாதம் 3-ந் திகதிவரையும் ரிமாண்டில் வைக்குப்படி கூறினார். பிரேதபரிசோதனையைபருத்தித்துறை டாக்டர் திரு சோமசுந்தரம் நடத்தினார்)

தமது மனைவியின் ஈமக்கிரியையில் கலந்துகொள்வதற்கு அனுமதியளிக்குமாறு எதிரி கேட்டதற்கிணங்க மாஜிஸ்டிரேட் ஈமகிரியையில் கலந்து கொள்வதற்கு அனுமதி அளித்தார்.

---

## ஸ்ரீ ரங்கானந்தஜி யாழ்ப்பாணவிஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்புஇராமகிருஷ்ண மடத்தைச்சேர்ந்த சுவாமி ஸ்ரீ ரங்கானந்த ஜி இம் மாதம் 31-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். அன்று மாலை 6 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் இராமகிருஷ்ண ஐயந்தி விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஜூன்மாதம் 1-ம்திகதிகளில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தினசரி மாலை 6 மணி தொடக்கம் ''ஸ்ரீ ஆண்டாள்பிரபாவம்'' என்னும் பொருள்பற்றி இரண்டு ஆராய்ச்சி விரிவுரைகள் நிகழ்த்துவார். இச் சொற்பொழிவுகளை நீதியர

## பெற்றோர்தின விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

''அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதும் நிலைமைமாறி சில இடையூறுகள் ஏற்படலாமென அஞ்சப்பட்டது. ஆனால் இப்பாடசாலையைப் பொறுத்தவரை எவ்வித இடையூறுமேற்படாதவாறு மொழியும் மதமும் உரியமுறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது மகிழ்ச்சிக்குரியதொன்றே. இந்த நிலையைதொடர்ந்தும் பராமரித்துவர சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் உழைக்கவேண்டும்.''

இவ்வாறு கொக்குவில் கிராமசபைத் தலைவர் திரு சி அருளம்பலம் கொக்குவில் கிழக்கு நாமகள்வித்தியாசாலை பெற்றோர்தின விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினார்.

திரு அருளம்பலம்மேலும் பேசுகையில் திரு சு இராசரத்தினத்தின் அயராத உழைப்பினாலேயே மேற்படி வித்தியாசாலை உருவாகியது என பாராட்டுத் தெரிவித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்து பரிசில்களை வழங்கிய நல்லூர் வட்டார வித்தியாதரிசி திரு என் ஆர் பாலசிங்கம் பேசுகையில், மாணவர்கள் பாடப்புத்தகங்களுடன் மட்டும் நில்லாது சகலதுறைகளிலும் ஈடுபட்டு முன்னேற வேண்டும் என்றார்.

மேற்படி பாடசாலைத் தலைமைமாசிரியர் திரு ரி கனகரத்தினம் தமது வருடாந்த அறிக்கையில் பாடசாலையின் தரத்தை மேலும் உயர்த்த பெற்றோர் ஆதரவு தரமேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். கல்வித்துறை, சமயத்துறை, விளையாட்டுத்துறை ஆகிய துறைகளில்பாடசாலையின் சாதனை பற்றியும் அவர் எடுத்துக் கூறினார்.

திரு இ த சுப்பிரமணியம் பேசுகையில் ஆசிரியர்கள் மாணவர்களைச் செம்மையான பாதையில் செல்ல வழிகாட்டவேண்டும் என்றார்.

திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் நன்றி கூறினார்

மாணவரின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

## பரிசளிப்பு விழா

உடுப்பிட்டி, சனி

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா இம்மாதம் 31-ம் திகதி நடைபெறவிருக்கிறது

இவ்விழாவுக்கு கலாநிதி எச். டபிள்யு தம்பையா [illegible]

சர் கலாநிதி எச். டபிள்யு. தம்பையா ஆரம்பித்து வைப்பார்.

## வேலை ஆரம்பம்

மாத்தறை, சனி

புதிய மாத்தறை ஆஸ்பத்திரியின் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

---

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவாக அங்கு தமிழர் நிலையைப் பற்றிக் கேட்டதற்கு, கரும்புத்தோட்டங்களில்வேலைசெய்யும் தொழிலாளர் உட்படத் தமிழரின் வாழ்க்கைத்தரம் மேலாகவே இருப்பதாயும் ஆனால் தீவு சுதந்திரமடைந்ததும், சீனிக்கு மார்க்கெட் கிடைக்காமல், பொருளாதாரத்துக்கு ஆபத்தேற்படலாமோவென்று அஞ்சப்படுவதாயும் சொன்னார்.

அங்குள்ள சீனர்கள் மதுபானக் கடைகளை அதிகாலையிலேயே திறந்துவிடுகிறார்களாம். காலையில் வேலைக்குப் போகும்போதும் மாலையில் திரும்பும்போதும் தொழிலாளர் அக்கடைகளுக்குச் சென்று மதுபானம் அருந்துவது ஒரு பெரிய சாபத்தீடாக இருப்பதாய்ச் சொல்லி வருந்தினார்.

சமய, கலாசாரத் தூது கோஷ்டிகள் தமிழகத்தில் இருந்து அடிக்கடி வர வேண்டுமென்று முதல் அமைச்சரிடம் தாம் கேட்கப்போவதாக சொன்னார்

கண்காணாத தீவுகளில் வசிக்கும் நம்மவர்களைப் பார்க்கவும் அவர்களது செய்திகளை அறியவும் நமக்கெல்லாம் எவ்வளவு ஆவலாகவுள்ளது! அங்குள்ள செய்திகளை அவ்வப்போது 'ஈழநாடு' வாசக அன்பர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு அன்புடன் இசைந்தார்.

இலங்கையிலே இந்திய டிபுடி ஹைகமிஷனராக இருந்த அன்பர் மணி அவர்கள் தான் இப்போது மொறிஸ்தீவில் ஹைகமிஷனராக இருக்கிறாராம். யாழ்ப்பாணத்தில் இலங்கை-இந்தியர் சங்கத்தையும் அவர் தான் ஆரம்பித்து வைத்தவர். அவருக்கு என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்கச்சொன்னேன்.

ஃ ஃ ஃ

தக்கா ரடியார்க்கு நீயே யென்றுந் தலையார் கயிலாயன் நீயே யென்றும், அக்காரம் பூண்டாயும் நீயே யென்றும் ஆக்கூரில் தான்றோன்றி நீயே யென்றும், புக்காய ஏழுலகும் நீயே யென்றும் புள்ளிருக்கு வேளூராய் நீயே யென்றும், தெக்காரமாகோணத்தானே யென்றும்நின்றநெய்த்தானாவென் நெஞ்சுளாயே.

—அப்பர் சுவாமிகள்

# செக்கோஸ் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டியது அவசியம். அத்துடன் மூன்றாவது மொழி ஒன்றினையும் அவர்கள் படிப்பதற்கு தேர்ந்தெடுக்க வேண்டும். மறறும் சமீபத்தில் உருவாக்கிய மாற்றம்யாதெனில் வகுப்புக்குள்ளேயே அமைந்துள்ள மாற்றங்களாகும். இதனால் ஆசிரியர்கள் வகுப்பில் உள்ள மாணவர்களின் அறிவுத்தகுதிக்கேற்ப அவர்களை இரண்டு பிரிவாகப் பிரிக்க ஏதுவாகவும் சுலபமாகவும் உள்ளது இம்முறைக்கேற்ப ஓர் ஆசிரியன் ஒவ்வோர் பிரிவிலும் உள்ள மாணவர்களுக்கும் தனித்தனியே கல்வி போதிக்கின்றான். ஆனால் மாணவர்கள் வருடாவருடம் அவர்களது முன்னேற்றத்துக்கு ஏற்ப மாற்றப்படுகின்றனர்.

# "கொலை முயற்சிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை"

## பாலாதம்பு சாட்சியம்

கொழும்பு, சனி

சுதந்திரக் கட்சி ஒரு வகுப்புவாதக் கட்சி என்றும் முதலாளித்துவ கொள்கைகளை அது கொண்டுள்ளது என்றும் வர்த்தக ஊழியர் சங்கக் காரியதரிசி திரு. பாலாதம்பு, வெடிகுண்டு சதிவழக்கு, மாஜிஸ்டிரேட் திரு. ஜே. பி. சி. சுவாரிஸ் முன்னிலையில் மீண்டும் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டபோது சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஏ. சி. டி' சொய்சாவுக்கு விசாரணை செய்கையிலேயே திரு. தம்பு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமசமாஜக் கட்சியின் தற்போதைய கொள்கைகளை எங்கள் கட்சியான புரட்சிவாத சமசமாஜக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை.

சமசமாஜக்கட்சி, சுதந்திரக் கட்சி ஆகியறவற்றின் இணைப்பு, தொழிலாளர் வகுப்புக்கு பெரும்கேட்டை விளைவித்துள்ளது. தொழிலாள வர்க்கத்தின்முன்னேற்றத்துக்குக் கூட்டரசாங்கம் பெரும் முட்டுக்கட்டையாக இருந்தது. இதனால் புரட்சிவாத சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கத்தை எதிர்த்து வந்தது.

ஆரம்பத்தில் சில கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் திரு. தம்பு தாம் 1941ம் வருடத்தில் சமசமாஜக் கட்சியில் சேர்ந்ததாகவும், சமசமாஜக் கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா எனச் சொல்வது தவறு என்றும் தெரிவித்தார்.

தேசியமய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ சுகததாஸாவையும் திரு. ஏ. டபிள்யு. ஏ. அபயகுணசேகரா என்பவரையும் கொலைசெய்யும் முயற்சியில் லாசறஸ் ஒபயசேகரா என்பவருடன் தான் ஒருபோதும் தொடர்புகொண்டிருக்கவில்லை எனவும் திரு. தம்பு கூறினார்.

# இலங்கைக்கு டெலிவிஷன்

## நிலையம் நிறுவ மே. ஜெர்மனி இணக்கம்?

கொழுமபு, சனி

தற்பொழுது மேற்குஜெர்மனியில் சுற்று விஜயம் செய்துவரும் உள்ளூராட்சி உதவி மந்திரி திரு. ஆர். பிரேமதாசா இலங்கைக்கு 'டெலிவிஷன் அமைப்பது குறித்து மேற்கு ஜெர்மன் அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்ச்சியான பேச்சு வார்த்தைகள் நடத்திவருகின்றார்.

இரண்டு வருடங்களில் கொழும்பில் டெலிவிஷன் நிலையமொன்றை அமைக்க மேற்கு ஜெர்மன் அரசாங்கம் இணங்கியிருப்பதாகத் தெரியவருகிறது

கொழும்பில் இப்படியான டெலிவிஷன் நிலையம்அமைக்கப்பட்டால், கொழும்பிலிருந்து 35 மைல் சுற்றளவுக்குள்ள மக்கள் இதனால் முதலில் பயனடைய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# "சங்கமாக ஒன்று திரண்டு மாதர் சேவையாற்ற வேண்டும்

ஊர்காவற்றுறை, சனி

நாரந்தனை மாதர்முன்னேற்ற மன்றத்தின் ஆரம்ப பொதுக்கூட்டம் தீவுப்பகுதி காரியாதிகாரி பி எல் பற்றிக் தலைமையில் அரசினர் நெசவுநிலைய முன்றலில் நடைபெற்றது,

தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு பி எல் பற்றிக் தமது தலைமையுரையில், சமூக சேவையாற்றுவதிலும் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குவதிலும்மாதருக்கு அதிக பங்குண்டு என்றும் தனித்தனியே செய்யும் தொண்டைவிட சங்கமாகச் சேர்ந்து மாதர்கள் உழைப்பதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு அதிக சேவை செய்யலாம் என்றும் குடிசைக்கைத்தொழில்களை ஊக்குவிக்க மாதர்சங்கங்கள் முன்வரவேண்டும் என்றும் கூறினார்.

கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. நா, விசுவலிங்கம் திரு. கணபதிப்பிள்ளை, திரு சி கனகரத்தினம் திருமதி இரத்தினம் போல் ஆகியோரும் உரையாற்றினர்,

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவி திருமதி திவ்வியம் மனுவற்பிள்ளை, உபதலைவி: திருமதி பி ஆசைப்பிள்ளை, செயலாளர் திருமதி மே பிீற்றர்பிள்ளை, உபசெயலாளர்: செல்வி ப சந்தியாப்பிள்ளை, தனாதிகாரி: திருமதி சி பீற்றர், நிர்வாகசபைக்கு திருமதி பி அந்தோனிப்பிள்ளை, செல்வி சுசிலா மாணிக்கம், திருமதி சிசிலியாபோல், செல்வி இல்டா சேவியர்.

## 'விடிவெள்ளி' நினைவுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

அமரர் 'விடிவெள்ளி' நினைவு விழா இம்மாதம் 31ந் தேதி செவ்வாய்க்கிழமை நல்லூர் சாதனா பாடசாலை தலைமையாசிரியர் திரு. சா. செல்லையா தலைமையில் நடைபெறும். கருத்தரங்கில் திரு. ஏ. ஜி. அரசரத்தினம், புரக்டர் எஸ். கனகரத்தினம், திருமதி உருத்திரா கந்தசாமி, டொமினிக்ஜீவா என்போர் சொற்பெருக்காற்றுவர்.

'குயிலே நீ கூவு' என்ற தலைப்பில் நடைபெறும் கவியரங்கிற்கு கவிஞர் சொக்கன் தலைமைதாங்க ச. வே. பஞ்சாட்சரம், விடிவெள்ளி தாசன், அரியாலையூர் வே. ஐயாத்துரை, செ. து. தெட்சணாமூர்த்தி, பண்டிதர் ச இராமச்சந்திரன் என்போர் பங்குகொள்கின்றனர்.

தேவன்-யாழ்ப்பாணம் தலைமையில் நடைபெறும் நாடக அரங்கில் நல்லூர் சங்கிலியன் நாடகமன்றத்தின் பத்தாவது தயாரிப்பான, நல்லை அமிழ்தனின், 'இரத்தப் பறவை' என்னும் சமூக நாடகம் நடைபெறும்.

---

## விமான சேவை

கொழும்பு, சனி

போஸன் தினத்தை முன்னிட்டு ஜூன் மாதம் 1-ம், 2-ம் திகதிகளில் கொழும்புக்கும் அனுராதபுரத்துக்கும் இடையே விசேஷ விமான சேவைகளை நடத்த எயர் சிலோன் ஒழுங்குசெய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியப் பேச்சுக்கள் திங்களன்று ஆரம்பம்

கோலாலம்பூர், மே 27

மலேசியாவுக்கு இன்று விஜயம் செய்த இந்தோனேஷிய இராணுவ நல்லெண்ண தூதுகோஷ்டியினர் இன்று மலேசிய துணைப் பிரதமர் துன் அப்துல் றஸாக்கைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

இப்பேச்சு வார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றதாகவும் இருதரப்பினரும் திருப்தியடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இக் கோஷ்டியினர் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானையும் சந்திப்பார்கள்.

இதற்கிடையில், உத்தேச மலேசிய தகராறு பற்றிய பாங்காக் பேச்சுக்கள் திங்கட்கிழமை ஆரம்பமாவாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. மலேசிய துணைப் பிரதமர் துன் அப்துல் றஸாக் நாளை பாங்காக் செல்கிறார். இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக் ஞாயிற்றுக்கிழமை பாங்காக் செல்வார்.

# த. பே. அ. பொதுஊழியர் சங்க மகாநாடு

மன்னார். சனி

அரசாங்கத்துடனான சகல தொடர்புகளையும் தமிழ் மொழிமூலமே வைத்துக் கொள்வதென்ற தீர்மானம் இங்கு நடைபெறவிருக்கும் தமிழ் பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் 3-வது ஆண்டு பொதுச் சபையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட விருக்கிறது.

த. பே. அ. பொது ஊழியர் சங்க மூன்ருவது மாநில மகாநாடும் பொதுக் கூட்டமும் ஜூன் மாதம் முதலாம் திகதி மன்னார் புனித சவேரியார் கல்லூரி பிரதம பகுதி மண்டபத்தில் நடைபெறும்.

சங்க உறுப்பினர்களும் தொழிற் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் காலை நிகழ்ச்சிகளுக்கு திரு. க. சிங்கராசா தலைமை வகிப்பார். மாலை நிகழ்ச்சிகளுக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தே. நேசையா தலைமை வகிப்பார்.

## இ. போ. ச புது வருட விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் பருத்தித்துறை கிளையின் புது வருட விழா 29-ந் திகதி நடைபெறும்

இவ்விழாவுக்கு திரு. ஈ. வனிகசேகரா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி வனிகசேகரா பரிசுகள் வழங்குவார்.

## கம்பன் கழக பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை கம்பன் கழகத்தின் பொதுக் கூட்டமொன்று தங்கட்கிழமை 30-ந் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறும். நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. சி. பாலசுப்பிரமணியன் 'கம்பநாடன் கவிதை' எனும் பொருள் பற்றி சிறப்புச் சொற் பொழிவாற்றுவார்.

## கயரோக நிவாரண சங்க விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வலிகாமம் மேற்கு கிளையின் பரிசளிப்பு விழாவும் பொதுக் கூட்டமும் செவ்வாய்க்கிழமை 3[illegible]-ந் திகதி நடைபெறும்.

இவ்விழாவுக்கு சமுக ஜோதி திரு. சி தியாகராசா ஜே. பி., தலைமை வகிப்பார் இ. க. நி. தேசிய சங்கத்தின் செயற்குழுத் தலைவர் டாக்டர் ஜே. எச். எப். ஜெயசூரியா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

## நெல் அளவு குறைவு

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாஜம் இவ்வாரம் இங்குள்ள எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கூப்பனுக்கு நெல் வழங்கியுள்ளது, ஒல்வொரு மூடைக்கும் சராசரி 5 கொத்துநெல்குறைவு ஏற்படக் காணப்பட்டதாகவும் கூட்டுறவுக் கடைமனேஜர்கள் எல்லோரும் தனித்தனி இத்தவறைச் சுட்டிக் காட்டி, சமாஜச் செயலாளர், கூட்டுறவுஆணையாளர், உணவுக் கட்டுப்பாட்டதிபர் ஆகியோர்களுக்கு அறிவித்துள்ளனர். மூடைக்கு 5 கொத்து வீதம் குறைவு ஏற்பட்டால் இவ்வார கடைசி நாளில் கூப்பனுக்கு நெல் வாங்கவரும் 100 கூப்பன் காரர்களுக்கு நெல் வழங்கமுடியாது பெரும் திண்டாட்டப் படவேண்டியுள்ளதாக பண்ணைகம் பலநோக்குச் சங்கமனேஜர் தெரிவித்துள்ளார்.

## அதிகார் செல்லமுத்து நூல் நிலையம்

சுழிபுரம். சனி

மானிப்பாயில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதிகார் செல்லமுத்து ஞாபகார்த்த நூல்நிலைய திறப்பு விழா ஜூன் மாதம் 10-ந் திகதி நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## மறைந்தபண்டிதருக்கு அஞ்சலி

சுழிபுரம். சனி

காலஞ்சென்ற பண்டிதர் அருளம்பலவனார் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஓர் அனுதாபக் கூட்டம் வட்டுக்கோட்டைதமிழ் சங்கத்தினரால் பண்ணைகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. புலவர் நா சிவபாதசுந்தரனர் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார். மறைந்த அறிஞரின் சேவையைப் பாராட்டி பண்டிதர் எஸ். மயில்வாகனம் ஓர் அனுதாபத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசினர். மற்றும் பலரும் பேசினர்.

## இடமாற்றம்

துணுக்காய். சனி

திரு. து. செல்வராசா, திருமதி ஆ. செல்வராசா ஆகியோர் முறையே வன்னேரிக்குளம் அரசினர் பாடசாலையில் இருந்தும், முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்திலிருந்தும் கல்விளான்குளம் அரசினர் பாடசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

## திடீர் மரணத்துக்கு இராப்போசனம் காரணமா?

ஊர்காவற்றுறை, சனி

இராப்போசனம்அருந்தியபின் திடீர் சுகவீனமுற்றஒருவர் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்குஎடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானர்.

வேலணை கிழக்கு வாசியான கணபதிப்பிள்ளை பாலசிங்கமே இறந்தவராவர். அதே உணவை உண்டு சுகவீனமுற்று ஆஸ்பத்திரிக்கு இவருடன் எடுத்துச் செல்லப்பட்ட பாலசிங்கத்தின் தந்தை செல்லர் கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு குணமடைந்துவருகிருர்.

மரணவிசாரணையின்போது பிரேதபரிசோதனை நடத்தப்பட்டு இறந்தவரின் உணவு இரசாயனநிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, இதன் காரணமாக மரணவிசாரணைத் தீர்ப்பு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

## பெற்ருர்தின விழா

ஊர்காவற்றுறை, சனி

எழுவைதீவு ரோமன் கத்தோலிக்க பாடசாலைப் பெற்ருர்தினவிழா அண்மையில் அதிவண மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. எழுவைதீவு கத்தோலிக்க மக்களின் முயற்சியால் கட்டப்பட்டபாடசாலைப் புதிய மண்டபத்தை தீவுப்பகுதி எம் பி திரு வி நவரத்தினம் திறந்துவைத்தார். ஊர்காவற்றுறைக்காரியாதிகாரி திரு பற்றிக் குத்துவிளக்கு ஏற்றிவைக்க வண மரியாம்பிள்ளை சமயாசாரப்படி ஆசீர்வதித்தார்.

இவ்வைபவத்தையொட்டி பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

வடி தொழிலில் 100 வருட அனுபவம்

1860 முதல், சிலோன் புருவரியின் உன்னத பியர் ரகங்கள் அனைத்தும் நுவரேலியாவில் தயாராகின்றன. வடி தொழில் நிபுணர் குழுவொன்று கையாளும் தேர்ந்த கலவை முறை, ஒவ்வொரு போத்தல் நுவரேலியா பியருக்கும்உன்னத தரமும் சுவையும் தருகிறது.



இயற்கைத் தூய்மை வாய்ந்த நுவரேலியா நீர்

நல்ல பியருக்கு அடிப்படைத் தேவை நல்ல தண்ணீர்...... மிகச் சிறந்த நன்னீர், தேவதாரு விருட்சங்கள் செறிந்த நுவரேலியாக் குன்றுகளிலிருந்து நிர்மலமான, சுகந்தமான, சீதள நிலையிற் கிடைக்கிறது.

8 சர்வ தேச விருதுகள்

தரமும் சுவையும் சிறந்த நுவரேலியா பியர் ரகங்கள், லண்டன் ஒலிம்பியாவில் நிகழ்ந்த 1952, 1957, 1960, 1964-ஆம் வருட உலக வடி தொழிற் காட்சிகளில், 8 உயர் தர விருதுகளைப் பெற்றன. நுவரேலியா பியர் ரகங்களின் சிறப்பு, பரீட்சித்து நிரூபிக்கப்பட்டது.






நுவரேலியா பியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மத்திய கல்லூரி இனிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். மாவட்ட கல்லூரிகளுக்கிடையான 2ம்பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் போயா தினத்தை யொட்டி நடைபெற்ற போட்டியில் யாழ். மத்திய கல்லூரி இன்னிங்ஸால் வெற்றிபெற்றது.

கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் யாழ். மத்தியகல்லூரிக்குமிடையே நடைபெற்ற இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி திறமையாக விளையாடி தனது முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகளையும்இழந்து 525 ஓட்டங்களை வெற்றிகரமாகப் பெற்றது. இதில் பாலேந்திரா 80 ஓட்டங்களையும், சாந்திகரன் 65 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம் தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 116 ஓட்டங்களையும் பெற்றது. இப்போட்டி யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

# நேரு நினைவுதின விளையாட்டு போட்டிமுடிவுகள்

உடுப்பிட்டி, சனி

''மறைந்த ஆசிய ஜோதி நேரு பாரதத்தில் மட்டுமின்றி உலகம் முழுவதிலும் மக்களின் ஏகோபித்த அன்பையும் பாராட்டுகளையும் பெற்று விளங்கினுர். இச் சுதந்திர வீரரின் நினைவு தினத்தில் அவரின் ஞாபகார்த்தமாக நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டிகள் இப் பகுதி மக்களின் பண்புக்கு ஓர் உதாரணமாக விளங்குகிறது'' என்று உரணவாய் தெற்கு கலா படிப்பக மன்ற நேரு நினைவு தின விழாவில் காலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. ஐ. சிவகுரு கூறினுர்.

சில முடிவுகள் வருமாறு: (பாலர் பிரிவு) 75 யார் ஓட்டம்: எஸ் சிவபாதம், எஸ் இராமனுதன், ச தெய்வேந்திரம். சங்கீதக் கதிரை: இ தர்மலிங்கம், கே முருகானந்தம், ப இராசகுரு. (கீழ்ப்பிரிவு) 100 யார் ஓட்டம்: கே சிவபாதம்,கே வேலாயுதம்பிள்ளை, த மகேந்திரன். (மத்திய பிரிவு) 100 யார் ஓட்டம்: எஸ் சின்னராசா, வீ இராசையா, எஸ் தெய்வமணி. 220 யார் ஓட்டம்: வீ இராசையா. (மேற்பிரிவு) 100 யார் ஓட்டம்: எஸ் கே இரத்தினம், பீ சிவகுரு. 440 யார் ஓட்டம்: கந்த. இரத்தினம், சிவகுரு, த சிவகுரு. 880 யார் ஓட்டம்: எஸ் ஸ்ரீமுருகன், எஸ் செல்வநாயகம், சி தம்பையா. ஒரு மைல் அஞ்சலோட்டம்: இமையாணன் விளையாட்டுக் கழகம், மூத்த விநாயகர் சனசமூக நிலையம், வள்ளுவர் விளையாட்டுக் கழகம். 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஒரு மைல் ஓட்டம்: ஐ சின்னையா.

யாழ். மாவட்ட

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் சில முடிவுகள் வருமாறு:

### அரியாலை வெற்றி

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக ஏ பிரிவுக்கும் ஓ. எல், ஆர். விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் அரியாலை 46 ஓட்டங்களும் ஓ. எல். ஆர். விளையாட்டுக்கழகம் 37 ஓட்டங்களும் பெற்றன. இரண்டாவது இன்னிங்ஸில் அரியாலை 46 ஓட்டங்களும் ஓ. எல். ஆர். விளையாட்டுக் கழகம் 38 ஓட்டங்களும் பெற்றன. இப்போட்டியில் அரியாலை 27 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

### நல்லூர் ஸ்ரேயல் வெற்றி

'றிக்கோல் கொஸ்ரல்' விளையாட்டுக் கோஷ்டிக்கும் நல்லூர் ஸ்ரேயல் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் றிக்கோல் கொஸ்ரல் விளையாட்டுக்கோஷ்டி 20 ஓட்டங்களும் ஸ்ரேயல் விளையாட்டுக்கழகம் 42 ஓட்டங்களும் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் றிக்கோல் கொஸ்ரல் கோஷ்டி 32 ஓட்டங்களும் ஸ்ரேயல் கோஷ்டி 35 ஓட்டங்களும் பெற்றன. இப்போட்டி முடிவில் ஸ்ரேயல் விளையாட்டுக் கழகம் றிக்கோல் கொஸ்ரல் கோஷ்டியை 25 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிகள் யாவும் யாழ்முற்றவெளி மைதானத்தில் நடைபெற்றன.


"லீடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரீ சேட்
- ரெறி சேட்
- ரெமி பிளவுஸ்
- பேபி வெஸ்ட்
- கால்மேஸ்
(Nylon & Cotton)

லீடன் காமென்ஸ்

32A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


வெளிநாட்டு

# விளையாட்டு செய்திகள்

''அவதானி''

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையேயான கிரிக்கெட் (டெஸ்ட்) போட்டிகள் அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகின்றன. முதலாவது கிரிக்கெட் டெஸ்ட், மான்ஸெஸ்டர் ஓல்ட் டிரபோட்டில் நடைபெறும். இப்போட்டிக்கு ஜே. எஸ். புல்லரும் சி. எஸ். எலியொட்டும் மத்தியஸ்த்தர்களாகக் கடமையாற்றுவார்கள்.

## மத்திய பார குத்துச்சண்டை

இமைல் கிறிபித்துக்கும் ஜோய் ஆர்ச்சருக்குமிடையேயான உலக மத்தியபார குத்துச்சண்டைப் போட்டி அடுத்தமாதம் 13-ந் திகதி நியுயோர்க்கில் நடைபெறும்.

உலக மத்திய பார குத்துச் சண்டை வீரரான இமைல் கிறிபித் கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற சாம்பியன் போட்டியில் நைஜீரிய வீரரான டிக் ரைகரிடமிருந்து சாம்பியன் பட்டத்தை சுவீகரித்திருந்தார்.

ஜூன் மாதம் நடைபெறும் சாம்பியன் போட்டி இமைல் கிறிபித்துக்கு ஒரு பலப் பரீட்சையாகவிருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## கராச்சி போட்டி

பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் அடுத்தமாதம் நடைபெறும் கராச்சி வெற்றிக் கிண்ணத்துக்கான உதை பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இலங்கை கோஷ்டி ஜூன் மாதம் 2-ந் திகதி கராச்சிக்குப் புறப்படும். இவ் வெற்றிக்கிண்ணத்தை இப்பொழுது இலங்கை வைத்திருக்கிறது. இலங்கைக் கோஷ்டியில், இராணுவத்தைச் சேர்ந்த பத்துப்பேரும் விமானப் படையைச் சேர்ந்த ஐவரும் கடற்படையைச் சேர்ந்த மூவரும் இருப்பார்கள்.

## விம்பிள்டனில் இலங்கை வீரர்

விம்பிள்டனில் ஜூன் மாதம் 28-ந் திகதி ஆரம்பகும் கனிஷ்டபிரிவுக்கான டெனிஸ் சாம்பியன் போட்டியில் இலங்கை சார்பாக கொழும்பு ஸ்ரேயல் கல்லூரியைச் சேர்ந்த நிஹால் பெர்ணண்டோ கலந்துகொள்வார். பெர்ணண்டோ ஜூன் மாதம் 4-ந் திகதி இலங்கையிலிருந்து புறப்படுவார்.

## ஸொனிலிஸ்டன்

உலக அதிபார குத்துச் சண்டைவீரர் காஸியஸ் கிளேயுடன் மீண்டும் ஒரு தடவை தாம் 'மோத' விரும்புவதாக முன்னுள் உலக அதிபார குத்துச்சண்டை வீரர் ஸொனி லிஸ்டன் சுவீடனில் தெரிவித்துள்ளார்.

---

## கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் யாழ். மாவட்ட கைப்பந்தாட்டக் கழகங்களுக்கிடையேயான மூன்ருவது வருடாந்தச் சுற்றுப் போட்டியை இம்முறை பெரிய திட்டத்தில் நடத்துவதென மேற்படி விளையாட்டுக்குழு முடிவுசெய்துள்ளது. ஏ பிரிவு, பி பிரிவென 2 பிரிவுகளாக நடத்தப்படவிருக்கும். இப்போட்டிகள் யாவும் மேற்படி நிலைய [illegible] ளது.


வீட்டை நடத்திக்களைத்த அம்மாவுக்கு

# மாமைட்



பட்டிட்டுப் பொட்டிட்டுச் சிறுவர்களை பாடசாலைக்கனுப்பி



வீட்டைக் கூட்டி, ஒழுங்குபடுத்தி



மட்டற்ற சமையல் வேலைகளை நாள்தோறும் செய்து களைத்திருப்பதால்



தேக சுகத்திற்கும் தெம்பிற்கும்
விசேஷமாக அம்மா அருந்துவது மாமைட்!

சக்தி மிகுந்த சுகவாழ்வுக்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் கொண்ட ஒரு சிறந்த உணவு மாமைட். வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சப் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம்.






[illegible] பொருள் சர்க்கரைப் பொருள் அற்ற, B விட்டமின் நிறைந்த, தூய்மையான, தாவர உணவுப் பொருள்.

629/66


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழ் விஞ்ஞானிக்கு சாம்ராஜ்ய உபகாரச்சம்பளம்

லண்டன், மே 28

சாம்ராஜ்ய விஞ்ஞானிகளுக்கு அளிக்கப்படும் ஐந்து உபகாரசம்பள உதவிகளைப் பெறுபவர்களின்பெயர்கள் லண்டனில் அறிவிக்கப்பட்டது. அவர்களுள் இலங்கை விவசாயத் துறையினரும் ஒருவர். பிரிட்டிஷ் விவசாய முன்னோடியாளரைக் கௌரவிக்குமுகமாக, 1964 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சேர் ஜோர்ஜ் ஸ்டேபிள்டன் ஞாபகார்த்த டிரஸ்டின் விதிகளுக்கிணங்கவே இவ்வுபகாரச் சம்பளங்கள் அளிக்கப்படுகின்றன.

இவ்வுபகாரச் சம்பளம் பெறும் இலங்கையர் டாக்டர் ஆர் ஆர் அப்பாத்துரை இலங்கை சர்வகலாசாலையின் விவசாய இலாகாவில் சிரேஷ்ட விரிவுரையாளர்.

இந்த உபகாரச் சம்பளத்தைப்பெறும் மற்றையோர் பிரிட்டனைச் சேர்ந்த டாக்டர் எம் ஈ காசின், — இவர் நியூஸிலந்துக்குச் செல்வார்; நியூஸிலந்தைச்சேர்ந்த திரு டி சி எட்மண்ட் — இவர் அவுஸ்திரேலியாவுக்கும் பிரிட்டனுக்கும் செல்வார்; ஜமேக்காவைச் சேர்ந்த திரு டின்ஸ்டேல் சென்ட் கலஜர் மக்ளொட், பிரிட்டனுக்குச் செல்வார்; பிரிட்டிஷ் கியனாவைச்சேர்ந்த டி ஐ ஸ்ரேரன், உலக சுற்றுப் பிரயாணத்தில் செல்வார்.

1968-ம் ஆண்டில் இப்படிப்பட்ட பிரயாணமான்யத்தைப்பெறவென 1967 ல் இன்னும் கூடிய தொகையினர் தேர்ந்தெடுக்கப்படுவரென ட்ரஸ்ட் கூறியுள்ளது.

பிரிட்டிஷ் விவசாய முன்னோடியாளரான ஸேர் ஜோர்ஜ் 1960-ம்ஆண்டில்இறந்தபோது, அவரின் ஞாபகமாக ஒரு சின்னத்தை எழுப்பாமல், ஒருநிதி திரட்டி, சாம்ராஜ்யத்திலுள்ள விவசாய விஞ்ஞானிகளுக்கு பிரயாண உபகாரச்சம்பள உதவிகளை அளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைச் சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் ஆர் ஆர் அப்பாத்துரை 37 வயதுடையஇளைஞர் பி எஸ் ஸி (இலங்கை) எம் எஸ் ஸி (டெக்ஸாஸ்) பி எச் டி (லண்டன்) பட்டதாரி. கென்டிலுள்ள வை கல்லூரியில் மூன்றுவருட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர்.

டாக்டர் அப்பாத்துரை, முதலில் ஹேர்லி கிராஸ்லண்ட் ஆராய்ச்சி நிலையத்திலும் பின்னர் ஸ்கொத்லந்து, ஆர்ரிலுள்ள ஹன்னா பால்பண்ணை ஆராய்ச்சிநிலையத்திலும் படிப்பில் ஈடுபடுவார்.

சட்டவிரோத குடியேற்றம், கடத்தல்

# மன்னாரில் தீவிர தடுப்புநடவடிக்கைகள்

மன்னார், சனி

மன்னார் கச்சேரியில் நடைபெற்ற உயர்தர மகாநாடு ஒன்றில் சட்டவிரோதக் கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் ஆகியவற்றைத் தடைசெய்வது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்குமிடையே நடைபெறும் சட்டவிரோதக் கடத்தலை எவ்விதமாக முறியடிக்கலாமென்பது குறித்து இம்மகாநாட்டில் தீவிரமாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. நேசையா தலைமை வகித்தார்.

உயர் சக்திகொண்ட இரண்டு இயந்திரப்படகுகளை கடற்படையினரிடமிருந்து பெறுவதென்றும் சட்டவிரோதக் குடியேற்றம் சட்டவிரோதக்கடத்தல்ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கு இவற்றைப் பயன்படுத்துவதென்றும் இம்மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

ஒழுங்கான கண்காணிப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதென்றும் இம்மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது

மன்னார் பகுதியில் டைனமைட் வெடி வைத்து மீன் பிடிப்பதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது

# "கம்போடியாவில் வட வியட்னும் துருப்புக்களா?"

## "எனக்குத்தெரியாது" என்கிறார் அமெரிக்க வெளிமந்திரி ரஸ்க்

வாஷிங்டன்' மே 8 2

கம்போடியாவில் 6 வட வியட்னும் ரெஜிமெண்டுகள் திரண்டிருப்பது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் கூறினார்.

மத்திய வியட்னுமிலுள்ள அமெரிக்க படைத்தளபதி இந்த விஷயத்தை முன்பு அறிவித்திருந்தார்.

இதுபற்றித் தாம் விசாரிக்கப் போவதாய்க் கூறிய ரஸ்க், சர்வதேச கண்காணிப்புக் கமிஷனைக் பலப்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

கம்போடியாவின் நடு நிலைமையை சர்வதேச கண்காணிப்பு கமிஷன் மேற்கொள்வதை ரஸ்க் ஆதரித்தார். கம்போடியாவை வடவியட்னுமியர் அடைக்கல இடமாக உபயோகிப்பது தமக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

ஆனால் தமது நாட்டில் வடவியட்னும் துருப்புக்கள் திரண்டிருப்பதை கம்போடியா மறுத்திருக்கிறது. அமெரிக்கா மேற்கொள்ளவிருக்கும் ஆத்திர மூட்டும் செயலுக்கு இது ஒருசாக்கு என கம்போடியா கூறுகிறது.

## ரயிலுக்குப் பலி

அத்தனகலை, சனி

வியாங்கொடை தேசிய ஜவுளி கார்ப்பரேஷனைச்சேர்ந்த பி வில்ஸன் என்பவர் ரயில்பாதைவழியாக நடந்து செல்கையில் ரயிலில் மோதுண்டு மரணமானார்

# கச்சதீவு ஒரு சீதனக் காணி

## பழைய ஓலைச்சுவடி நிரூபிக்கிறதாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

18-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் நெடுந்தீவைச் சேர்ந்த வேலாயுத உடையார் தமது புதல்வி குஞ்சியடிக்கு கச்சதீவில் பாதியை சீதனமாகக் கொடுத்தார் எனக் கூறும் 18-ம் நூற்றுண்டு ஓலைச்சுவடி ஒன்று அரசாங்கத்திடம்இருப்பதாக "வட தீவுகளின் சரித்திரம்" என்ற நூலை எழுதிய பண்டிட் ஸி. எஸ். நவரத்தினம் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் யாழ்ப்பாண அரசாங்க ஏஜண்ட் திரு. வேர்ணன் அபயசேகராவும், பிஷப் அதிவண. எமிலியானுஸ் பிள்ளையும் இத்தீவு விஷயத்தில் விரைவில் ஒரு முடிவுசெய்ய வேண்டும் என அரசாங்கத்துக்குத் தனித்தனியான அந்தரங்கக் கடிதம் எழுதியிருப்பதாகக் கூறப்படுகிறது.

வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள் இப்போது இந்த தஸ்தவேஜுகள் சம்பந்தமாகப் பரிசீலனை செய்துவருகிறார்கள்.

கச்சதீவு 3 1/2 மைல் சுற்றளவுள்ளது. 12-ம், 17-ம் நூற்றுண்டுகளுக்கிடையில் கச்சதீவு யாழ்ப்பாண மன்னர்களுக்குச் சொந்தமாக இருந்ததாக இந்த தஸ்தாவேஜுகள் நிரூபிக்கின்றன எனக் கூறப்படுகிறது.

# 3 வருட கடுங்காவல்தண்டனை

## லஞ்சம் வாங்கிய வழககில் தீர்ப்பு

கொழும்பு, சனி

விவசாயப்பகுதியில் என்ஜினியராகவிருந்த வெள்ளவத்தையைச் சேர்ந்த திரு. வி. பாலசிங்கத்துக்கு இன்று கொழும்பு நகரகூட்டு நீதவான் திரு. டி. விமலரட்ண மூன்று வருடகடுங்காவல் தண்டனை விதித்தார்.

ஆயிரம் ரூபாய் "லஞ்சம்" வாங்கியதாக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. லஞ்ச சம்பந்தமாக சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்கீழ் தண்டனை வழங்கப்படவிருக்கும் பல வழக்குகளில் இதுவும் ஒன்ருகும்.

மொனராகலையில் அரிசி ஆலையொன்று நிறுவப்பட்டது சம்பந்தமாகவே திரு. விக்டர் அருணுகபகே என்பவரிடம் திரு. பாலசிங்கம் லஞ்சம் வாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. டி. ஜேகரட்ணம் ஆகியவர்கள், திரு. எஸ். சுந்தரலிங்கத்தின் அனுசரணையுடன் எதிரிதரப்பில் ஆஜரானுர்கள். ஐயாபிரம் ரூபாய் பிணையின் பேரில் அப்பீல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 'லயன் கிளப்' புதிய பிரிவின் தலைவர்

கொழும்பு, சனி

இலங்கை 'லயன் கிளப்' பினுல் நிறுவப்பட்டுள்ள புதிய பிரிவு ஒன்றின் கவர்னராக திரு. சச்சிதானந்தா நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப்பதவி வழங்கும் வைபவம் கொழும்பு தப்ரபேன் ஹோட்டலில் நடைபெற்றது. இந்தப் புதிய பிரிவு சர்வதேச 'லயன் கிளப்' டைரக்டர் திரு. நோர்ஜி புண்டொலினுல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

தற்பொழுது கொழும்பு தெற்கு, கொழும்பு வடக்கு, தெகிவளை-கல்கிஸை, கண்டி யாழ்ப்பாணம் ஆகிய வட்டாரங்களில் 'லயன் கிளப்' பின் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

மாணவர்களுக்கு

பரீட்சையில் சித்தியில்லையேல் கவலை வேண்டாம்

உடனடியாகச் சேருங்கள்

வழிகாட்டுகிறது

வர்த்தக கலாசாலை

330, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

## விசாரணையில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிபார்சு எதுவுமில்லாமலும், சபையின் உத்தரவின்றியும் செலவுசெய்யப்பட்டிருப்பதாகவும் 1963-ம் ஆண்டுக்குப்பிறகு மேலதிகமாக கட்டப்படவேண்டிய பணத்தைக் கட்டும்படி சொல்லியிருந்தும் இதுவரை இப்பணம் கட்டப்படவில்லையென்றும், போக்குவரத்து, சுபாதாரம், மின்சாரம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்ட பணம் மேற்கூறியவற்றிற்கு ஒழுங்காகப் பயன்படுத்தபபடவில்லையென்றும், ஒரு பகுதிக்கு ஒதுக்கிய பணம் இன்னொரு பகுதிக்கு பாவிக்கப்பட்டிருப்பதும் விசாரணையின்போது தெரிய வந்ததாக அறியப்படுகிறது.

ஒரு வட்டார அபிவிருத்தி வேலைகளுக்காகப் பதிவு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்ட பணம் சபை அங்கீகாரமில்லாமல் வேருெரு வட்டாரத்துக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதாக விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

குழாய் நீர்த்திட்டத்தில் முதல் கட்டத்துக்காக செய்யப்படவேண்டிய வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கக்கூடியதாகவே, இரண்டாம் கட்டத்துவேலைகள் மேற்கொள்ளப்பட்டது குறித்தும் விசாரணையின்போதுஆலோசிக்கப்பட்து.

கமிஷனர் கொழும்பு திரும்பிய பின்னர் விசாரணையின்போது தெரியவந்த விஷயங்கள் குறித்து நடவடிக்கை மேற்கொள்வாரெனத் தெரிகிறது.

(ந. நி.)

## இன்று நடக்கும் சமயப் பிரசங்கம்

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டை தொகுதித் தமிழ்ச்சங்க ஆதரவில் இன்று (ஞாயிறு) மாலை 6 மணிக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் புலவர் திரு. இ. பாலசுப்பிரமணியம் வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் 'அருளும் பொருளும்' என்னும் பொருள் குறித்து பேசுவார்.

## உணவுக் கப்பல்

மாவிட்டபுரம், சனி

9000 தொன் அரிசி கொண்ட "டொர்ஜன்" என்ற உணவுக் கப்பல் அடுத்த இருதினங்களுக்குள் காங்கேசன் துறைமுகத்துக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மூன்று நாள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுசெய்திருப்பதுதான்.

நேற்று நடைபெற்ற மேற்படி சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் வேலை நிறுத்தம் செய்வதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது

இந்த வேலைநிறுத்தம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கூட்டுறவு வங்கி ஆகிய வர்த்தக வங்கிகளைப் பாதிக்கும் என்று கருதப்படுகின்றது.

சேவைப் பகுதியொன்றை ரத்துச்செய்வதுடன் ஆறு ஊழியர்களுக்குபதவிஉயர்வு கொடுப்பதற்கு 'நஷனல் அன்ட் கிரின்வே' வங்கி தீர்மானித்திருக்கிறது. இதனை அந்த வங்கி ஊழியர்கள் ஆட்சேபித்து 26 நாட்களாக வேலைநிறுத்தம் செய்துவருகிருர்கள்.

இந்த வங்கியின் ஊழியர்கள் சம்பந்தமாக ஒரு கைத்தொழில் நீதிமன்ற தீர்ப்பு ஏற்பட்டதாகவும் ஆனல் வங்கி ஊழியர்கள் அதை ஏற்கமறுக்கிருர்கள் என்று பிரஸ்தாப வங்கி அதிகாரியொருவர் கூறினுர்.

## இலங்கை ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வானெலிக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது.

டெலிவிஷன் நிலையமொன்றை இலங்கையில் நிறுவுவதானல் பெரும் செலவுகள் ஏற்படக்கூடும். ஆனல்கட்டுப்படுத்தப்பட்ட ஒரு பிரிவாக சிறிய அளவில் டெலிவிஷன் நிலையம் ஒன்றினை இந்தநாட்டில் விரைவில் நிறுவவேண்டும் என்று கமிஷன் கருத்துதெரிவித்துள்ளது. இந்தடெலிவிஷன் நிலையம் கல்வி அபிவிருத்திக்காகவே பயன்படுத்தப்படவேண்டும் என்றும் கமிஷன் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை வானெலியின் மாஅதிகாரியின் பதவி அரசாங்கச்சேவை உறுப்பினர்களுக்குமட்டும் கட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல் நாட்டில் உள்ள அறிவுமிக்க தகுதிவாய்த்த எவருக்கும் அப்பதவி கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும் என்றும் கருத்துத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

100 பக்கங்களுக்குமேல் எழுதப்பட்டுள்ள கமிஷனின் இந்த அறிக்கை ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று பிரிவுகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

## மலேஸியா — இந்தோனேஷியா

கோலாலம்பூர், மே 28

மலேஸியாவை நசுக்கும் கொள்கையை இந்தோனேஷியா உத்தியோகபூர்வமற்ற முறையில் கைவிட்டுவிட்டதாக, துணைப் பிரதமர் துன்ரஸாக் அறிவித்தார்.

இந்தோனேஷிய ராணுவ தூதுகோஷ்டி ஒன்று மலேஸியத் தலைவர்களுடன் நல்லெண்ணப்பேச்சுக்களை நடத்திய பின் ஜாகர்த்தா திரும்பியது. கெடுபிடி ஆரம்பமான 3 ஆண்டுகளுக்குப்பின் இரு நாடுகளுக்குமிடையேயான தொடர்பு இதுதான் முதலாவதாகும்.

இந்தோனேஷியா, தனது எதிர்ப்பைக் கைவிட்டு மலேஸியாவுடன்சாமாதானமாகவாழவிரும்புவதாக இத்தூதுகோஷ்டி தெரிவித்தது.

## மீன் விற்பனை

கொழும்பு, சனி

ஹவாமாகணா மக்கள் நன்மை பெறும் பொருட்டு மூன்பிடி கார்ப்பரேஷன் இப்பகுதியில் ஏழு விற்பனை ஏஜெண்டுகளை நியமித்துள்ளது. இதன் மூலம் மக்கள் தரமான மீனை குவைறவான விலைக்குப் பெறமுடியும்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org